# LAABH SAMACHAR

Volume: 09 Issue : 08 NOVEMBER 2020 Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE






SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

# Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles

# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Uses second hand Woven bags also available



37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014



Thirumalay Tradings
presents

V Carry Bags

MINIMUM ORDER
10 TO 100 BAGS.

LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS

To Order: 94438 31496

Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India



Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அவ்கிதெ ஃகோ மொன்னு பொஜெ*

## நமஸ்கார்...

மதுரை மாநகராட்சிக்கு புதிய ஆட்சியராக திரு. அன்பழகன் I.A.S.,அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர். மதுரை மாநகர வளர்ச்சிக்கு அவர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று நம்புகிறேன்.

நமது சேம்பரில், மாதாந்திர கூட்டங்கள் நடைபெறுவது போல், ஒவ்வொரு மாதமும், தொழில் துறை சார்ந்த கூட்டங்களும் நடைபெற இருக்கின்றன. அதன்படி, முதன்முறையாக கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட் துறையினர்கள் பயன்பெறும் வகையிலான துறைவாரியான முதல் கூட்டம் இந்த மாதம் நடைபெற்றது. இதில் கட்டுமானத்துறையினர்கள், கட்டிடக் கலைஞர்கள், ரியல் எஸ்டேட் துறையினர்கள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றது மகிழ்ச்சியளிக்கிறது.

தொழில் குறித்த கூட்டங்கள் மட்டுமே சேம்பரில் நடைபெறும் என்று இல்லை. அங்கத்தினர்கள் தங்களது தொழில் குறித்த எந்த ஒரு பிரச்சனைகள், சந்தேகங்கள், அரசு கோரிக்கைகளை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் தெரிவிக்கலாம். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு தீர்வு காண்பதே எங்களின் தலையாய நோக்கமுமாகும், பணியும். ஆகவே, அங்கத்தினர்கள் தங்களின் தொழில் குறித்த மேற்கூறிய இடர்பாடுகள் களைய சேம்பர்-ஐ அணுகி பயன் பெற விரும்புகிறோம்.

சேம்பர்-ல் இணைந்த பலர், தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை எங்கு கூறி தீர்வு காண்பது என்பது தெரியாமல் இருப்பதை சமீபத்தில் காண முடிந்தது. இதனை கருத்தில் கொண்டு அங்கத்தினர்களுக்கு இதனை மீண்டும் ஒரு முறை இதழின் வாயிலாக நினைவுபடுத்துகிறேன்.

தங்களின் தொழிலை எந்த ஒரு தடையுமின்றி எளிமையாக நடத்திச் செல்ல சேம்பர்-ஐ பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். நன்றி

**– குமரன் B ஜகுவா**

## திருக்குறள்

**உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்.**

ஸௌராஷ்ட்ர மொழியில்: ர்ஹத்த(அ)புல் சக்திஜன்னான் உத்ஸாகும் உத்ஸாக்தீ$^{3}$
ம்ஹத்$^{3}$ தீ$^{3}$ம் முட$^{3}$ யாத்தென ஜீ$^{4}$ குன்

**பொருள்:** தம்முடைய சக்தியை அளந்து அறிந்துகொள்ளாமல், வெறும் ஆவேசத்தில் ஒரு காரியத்தை ஆரம்பித்து அதை முடிக்க முடியாமல் இடையில் விட்டுவிட்டுக் கெட்டுப் போனவர்கள் உலகத்தில் பலர் உண்டு.

அதிகாரம் 48 | வலியறிதல் (தனக்குள்ள சக்தியின் அளவை அறிவது) | அரசியல்

# பொதுச்செயலாளர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

**20.10.2020** – வித்யா ஸேவா ரத்னா, ஸ்ரீமதி. M.P.V.K. சீதாபாய் அவர்கள் (ஸௌராஷ்ட்ரா பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் முன்னாள் தாளாளர்) காலமானார். அன்னாரின் இறுதி அஞ்சலிக்கு சேம்பர் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இவரது மறைவு நமது சமூகத்திற்கு ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும்.

**27.10.2020** – மாலை 6.30 மணிக்கு, கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில்துறை சார்ந்த சிறப்புக்கூட்டத்தை நமது சேம்பர் ஏற்பாடு செய்திருந்தது. மனை வாங்குவது மற்றும் வரைபட அனுமதி பெறுவதற்கான விதிமுறைகள் என்ற தலைப்பில் சேம்பர் வளாகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக Er. அ. விஜயன் அவர்கள் கலந்து கொண்டு உரையாடினார். இந்த கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமை தாங்கினார். சேம்பர் செயற்குழு உறுப்பினர் Er. A.B. குமரேஷ் பாபு அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**03.11.2020** – காலை 10.30 மணி அளவில், மதுரை மாநகருக்கு புதிய ஆட்சியராக பொறுப்பேற்றுள்ள திரு. அன்பழகன் I.A.S., அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். மேலும், சேம்பர் பற்றிய நடவடிக்கைகள் குறித்து சுருக்கமாக விவரித்து மதுரை மாநகரின் வளர்ச்சிக்கு கோரிக்கை மனுவையும் அளித்தனர். சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் இந்த சந்திப்பிற்கு ஏற்பாடு செய்தார்.

**03.11.2020** – மாலை 6.30 மணிக்கு, நமது சேம்பர்-ன் மாதாந்திர கூட்டம் Registration Process and Benefits on MSME's Udyam, TReDS, GeM & Champion என்கிற தலைப்பில் நடைபெற்றது. மேற்படி தலைப்பு குறித்த சந்தேகங்களுக்கு விளக்கமிளக்க திரு. KR. ஞானசம்பந்தன், தலைவர், லகு உத்யோக் பாரதி, மதுரை மற்றும் திரு. P.J. பன்சிதர், இணைச் செயலாளர், லகு உத்யோக் பாரதி, மதுரை ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இந்நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார். திரு. T.R. சரவணன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

– K.K. தினேஷ்

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

தீபாவளித் திருநாளை அனைவரும் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த குதூகளம் அனைவரிடமும் என்றென்று வாழ்வில் தொடர்ந்து நிலைத்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

கல்வித்துறையில் சாதனைப் படைத்த, நம் சமூக பெண்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்து, வாழ்வில் ஏற்பட்ட தடைகளை எதிர்கொண்டு வாழ்விலும், தொழிலிலும், சமூக சேவைகளிலும் உயரத்தைத் தொட்ட ஆன்மிகப் பேரொளியாய்த் திகழ்ந்த அம்மையார் ஸ்ரீமதி. M.P.V.K. சீதாபாய் அவர்களின் மறைவு நம் சமூகத்திற்கு பேரிழப்பு. நம் சமூகத்தில் உள்ள பெண்கள் அம்மையாரை முன் உதாரணமாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

இன்றைய உலகம் பெண்கள் முன்னேற்றத்தை விரும்புகிறது. அதற்காக பல்வேறு வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கிறது. அதனை முறையாக பயன்படுத்தி அம்மையாரைப்போல் நம் சமூகத்திற்கும், குடும்பத்திற்கு பயன்படும் வகையில் செயலாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.


அம்மையாரின் நினைவைப்போற்றும் வகையில் அவர்களின் வாழ்க்கைப் பயணக் குறிப்புகள் சுருக்கமாக இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதற்கு உதவிய திருமதி. S.P. கீதாபாரதி, தாளாளர், ஸ்ரீமந்நாயகி மந்திர் மெட்ரிக் பள்ளி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு சமீபத்தில் கொண்டு வந்துள்ள கல்விச்சீர்திருத்த முறையானது, பயிலும் காலத்திலேயே தொழில் பயிற்சியும் வேண்டும் என்ற நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை அங்கத்தினர்களுக்கு அழகாக விளக்கும் வகையில் இந்த இதழில் பிரசுரிக்க கட்டுரை வழங்கிய திரு. S.R. அனந்தராமன் அவர்களுக்கு நன்றி.

- B.S. ஜெனார்த்தனன்

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

சிறந்த தையல் ! குறைந்த விலையில் !

நீடித்த உழைப்பு தரும் !! ஒரே விலையில் !!

# ரேவதீஸ் டெக்ஸ்

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



https://www.youtube.com/watch?v=XAoQ57_RyeE&t=3711s



# மனை வாங்குவது மற்றும் வரைபட அனுமதி பெறுவதற்கான விதிமுறைகள்

ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாதாந்திர தொழில் கூட்டம் மட்டும் அல்லாது, துறை சார்ந்த கூட்டங்களையும் நடத்த நமது சேம்பர் நிகழ்ச்சிக்குழு திட்டமிட்டுள்ளது. அதன்படி முதல் துறை சார்ந்த கூட்டமாக கட்டுமான மற்றும் ரியல் எஸ்டேட் துறை குறித்த நிகழ்ச்சியை நடத்தும் நோக்கில், மனை வாங்குவது மற்றும் வரைபட அனுமதி பெறுவதற்கான விதிமுறைகள் என்ற தலைப்பில் கடந்த 27.10.2020 அன்று மாலை 6 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தை சேம்பர் செயற்குழு உறுப்பினர் Er. A.B. குமரேஷ் பாபு அவர்கள் ஏற்பாடு செய்தார். நிகழ்ச்சிக்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். சிறப்பு விருந்தினராக Er. அ. விஜயன், Assistant Director, DTCP அவர்கள் கலந்து கொண்டு அருமையாகப் பேசினார்.

அவர் பேசியதாவது; "இன்று அனைத்தும் ஆன்லைன் முறையில் நடைபெறுகிறது. பட்டா இல்லாமல் எந்த ஒரு கட்டிடத்தையும் துவங்க முடியாது. பட்டா வேண்டுவோர் ஆன்லைன் மூலமே இன்று பெற்றுக்கொள்ளலாம். நாம் ஆன்லைனில் பதிந்த அடுத்த நிமிடமே வருவாய்த்துறைக்குச் சென்றுவிடும். பதிவு செய்வோருக்கு குறுஞ்செய்தியும் வரும். முன்பு ஒரு பிளாட்டிற்கு பல்வேறு பெயர்களில் பதிவு செய்திருப்பர். தற்போது ஆன்லைன் வந்த பிறகு பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இல்லை.

பொறியியல் துறையினர்கள், கட்டிடக் கலைஞர்கள் போன்றவர்கள் தான் இன்று மிகவும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம். மக்களுக்குத் தெரிய வேண்டிய தகவல்களை அவர்கள் மூலமே சேர வேண்டிய சூழல் உள்ளது. ஆகவே, இன்றைய தேதி வரையிலான தகவல்களை அவர்கள் தக்க (Update) வைத்துக்கொள்வது அவசியமாகிறது" என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது, "சமீபத்திய அரசாணை ஒன்றில், குடியிருப்பு கட்டிடங்களுக்கு பத்தாயிரம் சதுரடி வரையில் (8 வீடு கட்டும் அளவிற்கு) 40 அடி உயரத்திற்கு கட்ட Consigned Local Body ( பஞ்சாயத்து / டவுன் பஞ்சாயத்து / கார்ப்பரேசன் / முனிசிபாலிட்டிக்கு அனுமதியளித்துள்ளதாக" தெரிவித்தார். "மக்கள் அனைவரும் DTCP-யில் வந்து அலைவதை தவிர்ப்பதற்காக இந்த அரசாணை வந்துள்ளதாகவும்" தெரிவித்தார்.

"இன்று ஒரு கட்டிடத்தை (குடியிருப்பு, வணிக வளாகம் எதுவாகினும்) கட்டும் போது Construction Continuous Certificate-ஐ பெற்று, கட்டிடம் கட்டி முடித்த பின் மேற்படி சான்றிதழை வைத்து Completion Certificate- ஐ பெற வேண்டும் என்ற புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த Completion Certificate-ஐ பெற்ற பிறகே, Local Body Tax, Lift, மின்சாரம், குடிநீர், கழிவுநீர் வெளியேற்றம் போன்றவைகளை பெற முடியும்" என்று தெரிவித்தார்.

பிறகு, "கட்டிட வடிவமைப்பாளர்கள் (Architect) தங்கள் வடிவமைப்பில் காட்டும் கவனத்துடன் அரசின் விதிமுறைகளையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டி" கேட்டுக்கொண்டார்.

கட்டிடம் கட்டுவது குறித்த தேவையான அனைத்து விதமான தகவல்களும் அரசின் DTCP வலைதளத்தில் பெறலாம் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பொறியியல் துறையினர்கள் தங்கள் சந்தேகங்களை கேட்டு அறிந்துகொண்டனர். மிகச்சிறப்பாக தெளிவாக பதில் அளித்து அனைவருக்கும் பயனுள்ளதாக கூட்டத்தை நடத்திச் சென்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட Er. அ. விஜயன் அவர்களை நமது சேம்பர் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தது. மேலும், இந்த கூட்டத்திற்கு கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை இரவு உணவு விருந்து அளித்த சேம்பர் உறுப்பினர் விசாகன் டிரேடர்ஸ் உரிமையாளர் திரு. M.C. சதீஷ் அவர்களை நமது சேம்பர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தது. இறுதியாக, நமது சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

SCC PROGRAMME




ஒரு மாஸ்க்கை 8 மணி நேரம் மட்டுமே அணியலாம்



https://youtu.be/-JMVniVMLr0

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831



# Registration Process and Benefits on Udyam, TReDS, GeM & Champions

ஆன்லைன் முறையில் பல்வேறு மாற்றங்கள் இன்று நிகழ்ந்து வருகிறது. குறிப்பாக தொழில் துறையினர்கள் தங்களை வலைத்தள உதவி இல்லாமல் இயங்கும் முடியாத சூழல் உருவாகி வருகிறது. தொழிலை எளிமையாக நடத்திச்செல்ல வலைத்தள உதவி இல்லாமல் மேம்படுவதில்லை. நமது தொழில் துறையினர்கள் பலருக்கு Udyam Registration, TReDS, GeM & Champions ஆகியவை குறித்த சந்தேகங்கள் இருந்து வருவதை அறிந்து இது குறித்த கூட்டம் நமது சேம்பர் கடந்த 03.11.2020 அன்று மாலை 6 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடத்தியது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. KR. ஞானசம்பந்தன், தலைவர், லகு உத்யோக் பாரதி, மதுரை மற்றும் கௌரவ விருந்தினராக திரு. P.J. பன்சிதர், இணைச் செயலாளர், லகு உத்யோக் பாரதி, மதுரை ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார். திரு. T.R. சரவணன், நிகழ்ச்சிக்குழுத் தலைவர் அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. N.R.R. கோபி அவர்கள் சிறப்பு விருந்தினரை மிக அழகாக அறிமுகம் செய்தார். சேம்பர் கௌரவ விருந்தினர் திரு. P.J. பன்சிதர் அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் Dr. A.R. கணேசன் அவர்கள் அறிமுகம் செய்தார்.

சிறப்பு விருந்தினர் திரு. KR. ஞானசம்பந்தன் அவர்கள் பேசுகையில், தொழில் அமைப்புகள் ஒருவருக்கொருவர் போட்டியாக இருக்கும் பட்சத்தில் வளர்ச்சி காண முடிவதில்லை மாறாக, இணைந்து ஒருவருக்கொருவர் உதவிகரமாக இருக்கும் பட்சத்தில் அனைத்தும் கை கூடுகிறது என்று கூறியதுடன், மதுரை மாநகர் ஒரு தொழில் நகரமாக மாறுவதற்கு நமது ஸௌராஷ்ட்ர சமுதயாத்திற்கு பெரும் பங்கு உண்டு என்று கூறி தனது உரையினைத் துவக்கினார்.

**Udyam Registration:**




முதலில் உத்யம் பதிவு குறித்து அவர்கள் பேசுகையில், SSI பதிவிலிருந்து உத்யோக் ஆதார் என மாறி பின் தற்போது உத்யம் பதிவு என மூன்றாவது முறையாக தற்போது மாற்றப்பட்டுள்ளது. இதில் உற்பத்தி மற்றும் சேவைத் துறையினர்கள் பதிவு செய்யலாம்.

MSME-யில் தற்போது தொழில் பிரிவுகள் மாற்றப்பட்டுள்ளதை அனைவரும் அறிந்ததே. குறைந்த முதலீட்டில் அதிக விற்றுமுதலை பெரும் நிறுவனங்கள் தங்களை சிறு, குறு நிறுவனங்களாக காட்டிக்கொள்வதை மாற்றியமைப்பதற்காக தற்போது முதலீட்டுடன் சேர்த்து விற்றுமுதலையும் கணக்கில் கொண்டு அந்நிறுவனம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிலை தற்போது வகுக்கப்படுகிறது.

உத்யம் பதிவானது இந்த ஆண்டு ஜுலை 1-ம் தேதி முதல் கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் இதற்கு முன் பதிந்தவர்களாக இருந்தாலும் இதில் மீண்டும் பதிய வேண்டும். இதில் சற்று மாற்றம் இருக்கும். உங்கள் முதலீட்டை (இயந்திர தளவாடம்) தாங்கள் வருமான வரியில் கொடுக்கப்பட்டதை வைத்து அதனடிப்படையில் தங்கள் தொழில் நிலையை வகுக்க முடியும். புதிதாக பதிவு செய்பவராக இருந்தால் நாம் அளிக்கும் விபரங்களை வைத்துத் தான் தங்கள் தொழில் நிலை விபரத்தை குறித்த பதிவு சான்றிதழ் அளிக்கப்படும்.

இந்தப்பதிவினால், வங்கியில் கடன் பெற சற்று எளிமையாக இருக்கும். இதில் மிக முக்கியமான பயன், Government Supply-க்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. அதோடு, Fecilitation Council பயன்மிக்கதாக உள்ளது. உங்கள் வாடிக்கையாளர் பொருளுக்கான பணத்தை தருவதற்கு காலம் தாழ்த்தி வந்தால் இந்த Fecilitation Counil உங்களுக்கு தங்கள்




# சல்பா இண்டஸ்ட்ரீஸ்

**வீட்டு உபயோகப் பொருட்கள்**

18-ஏ, வெங்கலக்கடைத் தெரு, மதுரை - 1. போன்: 0452 4250844
63/5, விரகனூர், மகாராஜன் நகர், ராமநாதபுரம் ரோடு, மதுரை - 9.
செல்: 98945 44813

**கீழ்கண்ட வீட்டு உபயோகப் பொருட்கள்
மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.**



K.K.Karunakaran
Mobile : 98409 60844
82206 94087
Factory : 98945 44813

* பினாயில் காம்பவுண்ட்
* டாய்லட் கிளினர்
* சோப் ஆயில்
* வாஷிங் லிக்யூட்
* டாய்லட் கிளீனர் (ஹார்பிக்)
* தரைசுத்திகரிப்பு ஆயில் (லைசால்)
* பாத்திரம் சுத்தம் செய்யும் ஆயில் (ப்ரில்)
* ஹாண்ட் வாஷ் லிக்யூட்
* ஆசிட் சிலர்ரி
* பிளிச்சிங் பவுடர்
* வாஷிங் சோடா
* காஸ்டிக் சோடா
* டிஸ்டில்டு வாட்டர்
* வாஷிங் பவுடர் செட்
* டிடர்ஜண்ட் பவுடர்
* ஒயிட் பினாயில்
* டிஸ்வாஸ் கேக்
* டிடர்ஜண்ட் சோப்ஸ்
* ஓம வாட்டர்
* டினோ பால்
* பாத்ரூம், டாய்லட் சம்பந்தபட்ட பொருட்கள் வாசனை திரவியங்கள் மற்றும் இதர கெமிக்கல்கள்





















வாடிக்கையாளரை அணுகி பணத்தைப் பெற்றுத் தருகிறது. 90% பெற்றுத்தந்துள்ளது. Export Incentives பெறுவதற்கும் இந்த சான்றிதழ் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த உத்யம் பதிவு புதிதாக பதிவு செய்பவர்களுக்கு எளிதில் சான்றிதழ் கிடைத்துவிடுகிறது. இதற்கு முன் பதிவு செய்தவர்களுக்குத் (உத்யோக், எஸ்.எஸ்.ஐ) தான் கால தாமதம் ஏற்படுகிறது. காரணம், தங்களின் தொழில் பதிவை வருவாய் துறையுடன் இணைத்து அதன்மூலம் தங்கள் தொழில் நிலையை வகுப்பதற்கு காலக்கெடு ஏற்படுகிறது என்று கூறினார். மற்றபடி இந்த உத்யம் பதிவில் பிரச்சனைகள் எதுவும் கிடையாது என்று கூறினார்.

**TReDS - (Trade Receivables Discounting System):**




அடுத்ததாக டிரெட்ஸ் குறித்து பேசுகையில், இது ஒரு பில் டிஸ்கவுண்டிங் முறை. இதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். சற்று மாறுதல்களுடன் ரிசர்வு வங்கியானது இந்த டிரெட்ஸ் போர்டல்-ஐ உருவாக்கியுள்ளது. இதன் கீழ் சில ஏஜென்சி நிறுவனங்களை கொண்டுவந்துள்ளது.

இதில் பதிவு செய்ய விரும்பும் தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழில் குறித்த ஏதேனும் ஒரு பதிவு எண் கொண்டு இத்தளத்தில் பதிவு செய்யலாம்.

ஒரு நிறுவனம் தமது வாடிக்கையாளரிடம் விற்ற பொருளுக்கான தொகையை இந்த தளத்தில் பதிவு செய்ய வேண்டும். அடுத்த சில மணி நேரங்களில் தங்களை வங்கிகள் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட வட்டி விகிதங்களில் பொருளுக்கான தொகையை அளிக்க முன்வரும். நமக்கு உகந்த வட்டி சலுகை அளிக்கும் வங்கியில் அப்பணத்தை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

இதில் முக்கியமானது, நமது வாடிக்கையாளர் அவ்வங்கிக்கு பணத்தை செலுத்தவில்லை என்பதற்காக நமக்கு அளித்த தொகையை நாம் திரும்ப செலுத்தத் தேவையில்லை என்பதே. ஆனால், நமது வாடிக்கையாளரும் இந்த தளத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இதில், ரூபாய் ஐநூறு கோடிக்கு மேல் வியாபாரம் செய்யும் தொழில் நிறுவனங்கள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். ஏற்றுமதியாளர்களும் பயன்பெரும் வகையில் இது செயல்படுவதாக தெரிவித்தார்.

**GeM - (Government e-Market place):**

அடுத்தபடியாக, **GeM** குறித்து பேசுகையில்; அரசாங்கத்திற்கு சப்ளை செய்யப்படும் பொருட்கள் அனைத்தும் இந்த தளத்தின் மூலமே நடைபெறும். சமீபத்தில் ஒரு பெண் தொழில் முனைவோர் மத்திய அரசு அலுவலகத்திற்கு பிளாஸ்க்-ஐ இந்த தளத்தின் மூலம் விற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் பதிவு செய்வதற்கு, முதலில் நமது நிறுவனம் பதிவு பெற்ற நிறுவனமாக இருக்க வேண்டும். பிறகு, நமது தயாரிப்புப் பொருட்களின் புகைப்படங்கள், அப்பொருளின் பயன்பாடு மற்றும் விபரங்களை இத்தளத்தில் உள்ளீடு செய்ய வேண்டும். அரசு டெண்டர்களை தேட வேண்டிய அவசியம் இல்லை. இதில் பதிவு செய்த நிறுனத்தினர்களுக்கு டெண்டர் செய்திகளை நேரடியாக இமெயில் மூலம் பெறலாம்.

வெளிப்படையாகவும், நேரடியாகவும் இந்த டெண்டர் முறை நடைபெறுவதால், மறைமுகமாக எந்த ஒரு முறையற்ற செயல்களும் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பதிவு செய்வதற்கு மிகவும் கடினமாக உள்ளது என்று பலர் கூறுகின்றனர். தற்போதைய நிலையில் சிறிது முயற்சி செய்து பதிவு செய்து விட்டால் பின் நம் தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று கூறினார்.

**Champions:**




சாம்பியன்ஸ் குறித்து பேசுகையில்; இது முற்றிலும், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

MSME-யில் பதிவு பெற்ற நிறுவனங்கள் தங்களின் எந்த ஒரு சிறு குறைகளையும் இந்த தளத்தில் பதிவு செய்தால் 24 மணி நேரத்தில் அரசாங்கத்திடம் இருந்து அழைப்பினைப் பெறலாம். அதில் தங்களின் குறைகளைத் தெரிவித்து விரைந்து தீர்வுகளை காணலாம். அரசு இதனை நல்ல முறையில் செயல்படுத்தி வருகிறது என்று கூறினார்.

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ்
158, தெற்கு மாசி வீதி, மதுரை - 1.
Ph : 2320536
100 ஆண்டுகள் SRB சில்க்ஸ் Since 1901
ஸ்தாபிதம் 1901
ஆடவர் மற்றும் பெண்களுக்கான பிரத்யேக ஆடையகம்
SRB பொட்டிக் BOUTIQUE
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1. போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர், மதுரை-20 போன் : 4961990
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.






https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be

# வாழ்த்துக்கள்





10ம் பக்க தொடர்ச்சி...

நிறைவாக, தற்போது ஆளும் மத்திய அரசு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தேவையான முயற்சிகளை சிறப்பாக செய்து வருகிறது என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார். மேற்படி ஒவ்வொரு தலைப்பின் நிறைவுற்குப்பிறகு, அங்கத்தினர்களின் சந்தேகங்களுக்கு மிகத் தெளிவாக பதிலளித்தார்.

அவரைத் தொடர்ந்து, கௌரவ விருந்தினர் திரு. P.J. பன்சிதர் அவர்கள் பேசினார்.

அவர், இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்ய லகு உத்யோக் பாரதி அமைப்பை அழைத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். நமது சமூகத்தில் தொழில் முனைவோர்களை உருவாக்க வேண்டும் என்று மிக அருமையாகப் பேசினார். தொழில்முனைவு என்பது நமது இரத்தத்திலேயே கலந்த ஒன்று. அதிக தொழில் முனைவோர்களை நமது சேம்பர் உருவாக்க வேண்டும். அதோடு, தொழில் வழிகாட்டிகள் பலர் நமது சேம்பரில் இருக்கையில் நம் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு இந்த ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிச்சயம் செயல்படுத்தும் என்று கூறி தனது உரையை சுருக்கமாக நிறைவு செய்தார்.

திரு. KR. ஞானசம்பந்தன் மற்றும் திரு. P.J. பன்சிதர் ஆகியோருக்கு சேம்பர் சார்பாக நினைவுப் பரிசுகள் வழங்கி கௌரவித்தது. அதோடு, இந்த நிகழ்ச்சிக்கு அறுசுவை இரவு உணவு விருந்து ஏற்பாடு செய்த சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. G.R. சுப்பிரமணியன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தது.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மதுரை மாநகருக்கு புதிதாக ஆட்சிப்பொறுப்பேற்றுள்ள ஆட்சியர் திரு. அன்பழகன் I.A.S. அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக நேரில் சென்று சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர். மதுரை வளர்ச்சிக்கு கோரிக்கை மனுவும் அளிக்கப்பட்டது.

## NEXTGEN PROGRAM

இளைய தலைமுறை தொழில்முனைவோர் கூட்டமைப்பான NEXTGEN, **RISE Together - 10th TEAM Meet** கடந்த 20.10.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் நடைபெற்றது. கொரோனா பெருந்தொற்று ஊரடங்கிற்குப் பிறகு, தொழிலை முன்னெடுத்துச் செல்லவும், புதிய தொழில் முனைவோர்களின் அறிமுக கூட்டமாக இந்நிகழ்ச்சி அமைந்தது. சமூக இடைவெளியை கடைப்பிடித்து இக்கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு NEXTGEN தலைவர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தை NEXTGEN செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

## WEBSITE FOR SCC MEMBERS AT OFFER PRICE

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்களின் தொழில் வர்த்தக வளர்ச்சிக்காக

சிறப்பு விலை ரூ. 365/- ல்

வெப்சைட் உருவாக்கித் தருகிறது.

அனைத்து தொழில் துறை சார்ந்த அங்கத்தினர்களும் இதில் இணைந்து தொழில் அபிவிருத்தி செய்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு: 93441 97952, 80566 56889




Available in :
15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml

சாரதி®
நல்லெண்ணெய்



Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in



# கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

–எஸ்.ஆர். அனந்தராமன்,
நிர்வாக அறங்காவலர், தமிழ்நாடு சௌராஷ்ட்ர கல்வியாளர் கூட்டமைப்ப, நெல்லை.

"என்னப்பா எப்படி இருக்கிற? உங்க அப்பா அம்மாவை பார்க்கத்தான் வந்தேன். இப்ப எந்த இடத்திலே வேலை பார்த்திக்கிட்டு இருக்கே?" வெளியூரிலிருந்து வந்த மாமா தான் மருமகனை இப்படி விசாரிக்கிறார். "நல்லாத்தான் இருக்கிறேன். எந்த வேலையும் கிடைக்க மாட்டேங்குது. பி.காம் படிச்சு என்ன பிரயோஜனம். வங்கித் தேர்வு, டி.என்.பி.சி. தேர்வுகள் எல்லாம் எழுதி பார்த்தாச்சி. செலவுதான் மிச்சம். இரண்டு வருசம் வீணாகி போய்க் கொண்டே இருக்கிறது''. இது மருமகனின் அங்கலாய்ப்பு.

மாமா விடவில்லை. "நம்ம ஊரிலேயும், ஊர் சுத்தியுள்ள பல ஊர்களிலும் பல தொழில் நடக்குது. பல தொழிற்சாலைகள் நடந்திக்கிட்டே இருக்குது. எங்காவது போய் வேலை கேட்டிருக்காயா? இந்த வாலிப வயசிலே வேலை எதுவும் செய்யாமல் இருந்தால் உன் செலவுக்கு நீ என்ன செய்யப்போறே. உங்கள் அப்பா ஒரு காலத்தில் அச்சாபீஸ்லே வேலை பார்த்தார். இப்போ வயசாயிட்டுதாலே சும்மா இருக்கிறார். உங்க அம்மாவுக்கும் உடம்பு சரியில்ல. சொந்தமாக ஏதாவது தொழில் செய்யக்கூடாதா?" இவ்வாறு மாமா தன் மருமகன் வடிவேலுவிடம் கேட்டார்.

"அரசாங்க வேலை கிடைக்கும் என எதிர் பார்க்கிறேன். போட்டி ஜாஸ்தியாயிட்டது. நம்ம மாவட்டத்திலே ஸபின்னிங் மில், டெக்ஸ்டைல் மில் மோட்டார், கிரைண்டர், சமையல் பாத்திரங்கள் செய்ய பல பாக்டரி இருக்குது. வாகனங்கள் கட்டுமான பணி, ஆலை எல்லாம் இருக்கு. அங்கே போய் கேட்டால் அனுபவம் இருக்கா என கேக்குறாங்க. ஆபீஸ்லே கணக்கு எழுதற வேலை கேட்டால் டிடிபி தெரியுமா? கணக்கு எழுதறதுக்கு டாலி தெரியுமா? ஆட்டோ கேட் படிச்சிருக்கியா ? என பல கேள்விகள் கேட்குறாங்க. வேலை கிடைச்ச பிறகு இதெல்லாம் தெரிஞ்சுக்கிலாம் என சும்மா இருந்திட்டேன். இதெல்லாம் நினைச்சி இப்போ வருத்தப்பட்டுகிட்டு இருக்கேன்". இது வடிவேலுவின் தற்போதைய நிலை.

வடிவேலுவுக்கு என் இந்த கஷ்டம் வந்தது?

இவன் பள்ளியில், கல்லூரியில் படிக்கிற காலங்களில் வருங்காலத்தில் வருமானம் பெற எந்த வழிகள் எல்லாம் உள்ளது, பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது, மக்களிடம் அவைகள் எப்படி சேர்க்கப்படுகிறது. அவைகளை பற்றி தெரிந்துகொள்ள அவன் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி பயிற்சி அளிக்க அவனுக்கு ஏதேனும் ஏற்பாடு இருந்ததா?

படிக்கிற காலத்திலேயே நம்மைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ள தொழிற்சாலைகள், வங்கி, வணிக ஸ்தலங்களுக்குச் சென்று பார்வையிட பள்ளி மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால் பார்வையிடும் போது பல சிந்தனைகள் மாணவர்கள் மத்தியில் வரும். ஏதாவது ஒரு வகையில் அவர்கள் மனதில் தான் எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படும். அதனை செயலாக்க அதற்கானத் திறமையை பிற்காலதத்தில் வளர்த்துக் கொள்ளலாம்.

மாணவர்களுக்கு புத்தக அறிவு தவிர தொழில், வருமானம்

– தொடர்ச்சி: பக்கம்–16

பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

வாழ்வில் வளம் பெற! வர்த்தகத்தில் வெற்றி பெற!!
SCT
MADURAI NO.1 ENTERTAINMENT CHANNEL
24X7 LOCAL TV CHANNEL IN MADURAI
Get in on Google Play Store
Sourashtra Cable TV SCT
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
94430 34009
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD

கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.



# வித்யா ஸேவா ரத்னா

# திருமதி. M.P.V.K. சீதாபாய் அம்மையார்

தர்ம சிந்தனைமிக்க மிகப்பிரபலமான நாட்டாமை மல்லி குடும்பத்தில் திரு. N.M.N. சேஷய்யர் - ராஜாமணி அம்மாள் அவர்களுக்கு மூன்றாவது புதல்வியாக 03.08.1928ல் ஆடிப் பெருக்கன்று திருமதி. சீதாபாய் அவர்கள் பிறந்தார்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக" என்பதற்கேற்ப சிறு வயது முதல் கல்விப்பற்று, தேசப்பற்று, ஆன்மீகப் பற்று கொண்டவராகத் திகழ்ந்தார். ஹிந்தியில் R.B.V. பட்டம் பெற்ற இவர் , ஹிந்தியில் சரளமாகப் பேசும் வல்லமை பெற்றவர்.

முசுவாதி. திரு. M.P.V. கிருஷ்ணமூர்த்தி அவர்களை மணந்த அவர்களுக்கு மூன்று புதல்வர்களும், ஒரு புதல்வியும் இருக்கின்றனர். புதல்வர்கள் இருவர் பொறியாளர்களாகவும், ஒரு புதல்வர் மருத்துவராகவும் உள்ளனர். புதல்வி B.Com., படித்து வீணை இசைக் கலையில் M.A. பட்டம் பெற்றவர்.

அம்மையார் தினந்தோறும் பல புத்தகங்களைப் படித்து பல துறைகளில் அறிவை வளர்த்துக் கொண்டார். தம் துணைவரைப் போலவே தாமும் பொதுத் தொண்டில் ஈடுபட்டார். மதுரை ரோட்டரி கிளப்பில் பெண்கள் இயக்கத்தின் செயலாளராகவும், தலைவராகவும் இருந்து சிறப்பாக பணியாற்றியுள்ளார்.

சிறந்த சாதனைப் பெண்மணியும், விடுதலைப் போராட்ட வீராங்கனையும், நம் ஸௌராஷ்ட்ர சமூகத்தில் ஒரே பெண் M.L.A.-வாகத் திகழ்ந்தவருமான, திருமதி. லெட்சுமிகாந்தம் அம்மையார் அவர்களுடனும், மதுரை காந்தி திரு. N.M.R. சுப்பராமன் M.L.A., அவர்களுடனும் இணைந்து, அவர்களின் அடிச்சுவடிகளைப் பின்பற்றி 1965 முதல் மதுரை ஸௌராஷ்ட்ர பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நிர்வாகக்குழு அங்கத்தினராக சேர்ந்து 2004லிருந்து 2017 வரை தாளாளராகச் சிறந்த முறையில் கல்விப்பணி ஆற்றியவர்.

2007ல் பள்ளியில் நடந்த வைர விழாவின் போது பல ஆண்டுகள் தொடர்ந்து கல்விப்பணியாற்றி வந்த அம்மையாருக்கு மத்திய அமைச்சர் திரு. G.K. வாசன் அவர்கள் வித்யா ஸேவா ரத்னா என்ற விருதினை வழங்கினார்கள். **கல்விச் சேவை செம்மல், ஸௌராஷ்ட்ரஶ்ரீ, வாழ்நாள் சாதனையாளர்** முதலிய பல்வேறு விருதுகள் இவரை அலங்கரித்தன.

அம்மையார் அவர்கள் ஸௌராஷ்ட்ர மத்ய ஸபையின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும், மாதர் நலக்குழு செயலாளராகவும், தலைவராகவும் திகழ்ந்து பல ஊர்களுக்குச் சென்று சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்.

1970ல் அவரது கணவர் இறைவனடி சேர்ந்தார். பின் மனம் தளராமல், தன்னம்பிக்கையுடன் அவர் நடத்திய தொழிலைத் திறம்பட நிர்வக்தித்தார்.

"து3க்கேஷ் வநுத்விக்3னமனா: ஸுகே2ஷுவிக3தஸ்பருஹ: வீதராக3ப4யக்ரோத4: ஸ்தி2ததீ4ர் முனிருச்யதே" என்ற கீதையின் சுலோகத்திற்கிணங்க, வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு சோதனைகளிலும், இன்னல்களிலும், பகவத் பக்தியுடன் எதிர் நீச்சல் போட்டு முன்னேறியுள்ளார்.








பூஜ்யஸ்ரீ மஹா சொர்ணாம்பா சரஸ்வதி அவர்களின் சிஷ்யையாக சிறந்து ஸ்ரீமத் பகவத் கீதை, சஹஸ்ரநாமங்கள், வேதாந்த சாஸ்திரங்கள் ஆகியவற்றை முறைப்படி கற்றவர். தாம் கற்றதை பலருக்கும் பயன்பட வேண்டும் என்ற உதார குணத்துடன் தம் இல்லத்தில் பல ஆண்டுகளாக பல தாய்மார்களுக்கு கீதை வகுப்புகள் நடத்தினார்.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒவ்வொரு பௌர்ணமியிலும் ஸ்ரீ ஸத்ய நாராயண பூஜை நடத்தினார். ஸௌராஷ்ட்ர வித்யாபவன் பள்ளியல் ஸ்ரீ ஸத்ய நாராயண விக்ரஹத்தை பிரதிஷ்டை செய்து ஒரு கோயில் எழுப்பித் தொடர்ந்து வழிபாடு நடத்த ஏற்பாடு செய்தார். சிறந்த சொல்வன்மை மிக்க அம்மையார் பல்வேறு ஆன்மிக ஸ்தாபனங்களில் நடைபெறும் விழாக்களில் பங்கேற்று தலைமையுரை ஆற்றி வந்தார்.

புன்முறுவல் பூத்த முகத்துடன் எல்லோருடனும் இனிமையாகப் பேசி, அன்பினால் அனைவரையும் அரவனைக்கும் பண்புடையவர். செல்வத்துப் பயன் ஈதலே என்று உணர்ந்து பள்ளிக்கும், மற்ற நல்ல பணிகளுக்கும் நன்கொடை வழங்கியுள்ளார். எண்ணித்துணிக கருமம் என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, எதையும் நன்கு சிந்தித்து செயலாற்றுபவர்.

தொலைநோக்குப் பார்வையுடைய இவர் தமது திறமை மிக்க நிர்வாகத்தால் மதுரை காந்தி N.M.R. சுப்பராமன் மகளிர் கல்லூரி மிகச்சிறப்பாக செயல்படுகிறது. 2015ல் அம்மையார் அவர்களின் தபால்தலை வெளியீட்டு விழா ஸௌராஷ்ட்ர மகளிர் பள்ளியில் மிக விமரிசையாக நடைபெற்றது.

அம்மையார் அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் ஊன்றிக் கவனிப்பார். எதையும் நாமே நேரில் சென்று கவனித்தால் தான் அவருக்குத் திருப்தி ஏற்படும். நன்றாக நினைவாற்றல் மிகுந்த அம்மையார். எப்பொழுதோ நடந்த நிகழ்ச்சியையும் இப்பொழுது நடைபெற்றது போல் வர்ணிக்கும் திறமை மிகுந்தவர்.

வித்யா சீலென ஷோபதே - கல்வி ஒழுக்கத்தால் பிரகாசிக்கும் என்ற கொள்கையுடன் எப்பொழுதும் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு கூட்டத்திலும் மாணவியர்களுக்கு அறிவுறுத்துவார். விடாமுயற்சியும், தன்னம்பிக்கையுடனும் செயல்படும்போது வெற்றி நிச்சயம் என்று கூறி அனைவருக்கும் நற்செயல்களைச் செய்ய தூண்டுகோலாகத் திகழ்ந்தார்.

கற்றது கடுகளவு, கல்லாதது விண்ணளவு என்ற தாரக மந்திரத்துடன் பணிவுடன் வாழ்ந்த அம்மையாரின் சொல்லும், செயலும் நமக்கு ரோல் மாடலாத் திகழ்கிறார்.

அம்மையார் காட்டிய நல்ல வழியில் நாமும் நடப்பதற்கு குருவருளும், திருவருளும் துணைநிற்க பிரார்த்திப்போமாக!

**–S.P. கீதாபாரதி**
தாளாளர்,
ஸ்ரீமந் நாயகி வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி, மதுரை.



– 13ம் பக்க தொடர்ச்சி...

பற்றிய அறிவு தரும் பயிற்சிகள் தற்போதைய கல்வியில் எதுவும் இல்லை. கல்லூரிப் படிப்பு, பள்ளிப்படிப்பு முடித்து எந்த வேலையும் இல்லாமல், வருமானம் இல்லாமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கும் வாலிபர்கள், பெண்கள் ஆயிரம், லட்சம் பேர் நாட்டில் உள்ளனர். அரசு வேலை, தனியார் கம்பெனியில் வேலை கிடைக்கும் என்று காத்து இருக்கிறார்கள். மக்கள் தொகையில் 25 சதவீதம் பேருக்கு தனியார் நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், வங்கி, ரயில்வே, காவல்துறை, நாட்டு பாதுகாப்பு போன்ற துறைகளில் வேலைகிடைக்காமல் மீதமுள்ளவர்கள் 75% சதவீதம் பேர் விவசாயம், கூலிவேலை அல்லது தினச்சம்பளம் மற்றும் பொருட்களை உற்பத்தி செய்யும் சுயசார்பு தொழில்களில் தான் ஈடுபட முடியும்.

**புதிய கல்விக் கொள்கை:** பள்ளிகளில் பயிலும் இள வயது மாணவர்களுக்கு பள்ளி கல்லூரி படிப்பு முடிந்த உடன் வேலைகளுக்காக காத்திராமல் சுயமாக ஏதேனும் தொழிலை துவங்க அதற்கான தொழில் அறிவை சிறுவயதிலேயே அளிப்பதுதான் புதிய கல்விக் கொள்கையாகும். 2019ம் ஆண்டில் இப்போதுள்ள மத்திய அரசால் புதிய கல்விக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் புதிய அம்சங்கள் பல உள்ளன. அவற்றில் ஒன்று தொழில் கொள்கையாகும். பள்ளி படிக்கும் காலத்தில் பள்ளி மாணவர், மாணவியர் தன் சுற்றுப்புற ஊர்களில் உள்ள தொழிற் கூடங்களுக்குச் சென்று அங்கு தயாரிக்கப்படும் பொருட்கள் பற்றி தெரிந்துகொள்வதாகும்.

**பல்முனைச் செயல்திட்டம்:** ஆறு முதல் எட்டாம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கு ஒவ்வொரு கல்வியாண்டிலும் பத்து நாட்கள் பை (School Bag) இல்லாத நாட்களாக அனுசரிக்கப்படும். அந்த நாட்களில் பள்ளி மாணவர்களுக்கு உள்ளூரில் நடைபெறும் தொழில்களைப் பற்றி நேரில் சென்று தெரிந்துகொள்வார்கள். ஓவியம், வர்ணம் தீட்டுதல், பொம்மை, சிற்பம், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பல கைவினைப் பொருட்களை தயார் செய்தல் போன்றவற்றை அறிதலும் தவிர தச்சு, நெசவு, டிசைன் செய்தல், ரெடிமேட் ஆடைகள் தயாரிக்கும் முறைகளை அறிதல் தவிர இசை, நடனம் மற்றும் கருவிகளை இயக்கும் முறையை அறிதலும் ஆகும்.

ஒன்பது முதல் பன்னிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு தொலை தொடர்பு, கணினி, ஊடகவியல் ஆகியவற்றை அறியும் பயிற்சி அளிக்கப்படும். பெரிய கம்பெனிகள், வங்கி, துறைமுகம் போன்ற இடங்களுக்கும் மாணவர்களை அழைத்துச் சென்று அந்த நிறுவனங்கள் இயங்குவது பற்றி சொல்லித் தரப்படும்.

தொழிற் கொள்கைக்கான முக்கிய நோக்கம் பள்ளி பருவத்திலேயே மாணவ மாணவியருக்கு தொழில் பற்றிய சிந்தனையை உருவாக்க வேண்டும். கல்லூரி படிப்பு முடிந்த உடன் ஒரு நாள் கூட வீணே வீட்டில் தங்கி காலம் தள்ளுவதைவிட தன் உள்ளத்தில் பதிந்த தனக்கு விருப்பமான தொழில்களை செய்வதற்கு முயற்சிக்கலாம் அல்லது அதன் தொடர்பான தொழிற்சாலைகளில் பணிக்கு சேரலாம். அரசு வேலைகளுக்கு அவை கிடைக்கும் என நினைத்து பல மாதங்கள், ஆண்டுகள் காத்திருக்க கூடாது என்பது நோக்கமாகும். மனித சக்தி பெருமளவில் வீணாகிப்போவதையும் தடுக்கலாம்!

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** என் வயது 62. இடது காலில் கட்டை விரலின் வடிவம் சீர்குலைந்து அவதிப்படுகிறேன். எனக்கு Gout என்னும் நோய் உள்ளது. மருத்துவர் இப்பொழுது இதற்கு அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைத்துள்ளார். Gout-க்கு அறுவை சிகிச்சை தேவையா?

**பதில்:** Gout என்பது இரத்தத்தில் Uric Acid என்னும் உப்புச்சத்து அதிகமாகி மூட்டினில் தேங்கி நிற்பதால் உண்டாகிறது. சகஜமாக இது கட்டைவிரலில் காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த Gout அனலை குறைக்கும் மருந்துகளை எடுக்க வேண்டும். சிலருக்கு பல காலங்கள் Gout இருந்தால் அதுவே மூட்டு தேய்மானம் ஆக மாறிவிடும். அவ்வாறு உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படலாம். இதை மனதில் வைத்து உங்கள் மருத்துவரிடம் கலந்து ஆலோசிக்கவும்.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,
வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436



ஸ்ரீ குமரன் ஆப்டிகல்
கம்ப்யூட்டர் கண் பரிசோதனை செய்யப்படும்.
கண்களில் காண்டாக்ட் லென்ஸ் பொருத்தப்படும்.
கண் பரிசோதனை இலவசம்
Computer Eye Testing Available Here
134, பாண்டிய வேளாளர் தெரு, மதுரை - 1. செல்: 98420 69421, 99522 21781


O.V.K. பாஸ்கரன்
TRC
தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...
ரிஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை–625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்

V.K. ஜெயசங்கர்

# டெபிட், கிரெடிட் கார்டுகளில் புதிய 10 மாற்றங்கள்




டெபிட், கிரெடிட் கார்டுகள் மூலம் மேற்கொள்ளப்படும் பரிமாற்றங்கள் பாதுகாப்பாக இருக்கும் வகையில் ரிசர்வ் வங்கி பல புதிய விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த விதிமுறைகள் அனைத்தும் அக்டோபர் 1-ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. வங்கிக்கணக்கு வைத்துள்ள அனைவருக்கும் டெபிட் கார்டு பெரும்பாலும் இருக்கும். கிரெடிட் கார்டுகள் ஒவ்வொருவரின் ஊதியத்துக்கு ஏற்பட வங்கிகள் வழங்குகின்றன. தேவைப்படுபவர்கள் ஏற்றுக்கொண்டு பயன்படுத்தி வருகின்றன. ஆனால், டெபிட், கிரெட் கார்டுகளை பயன்படுத்தும் போதும், ஆன்லைனில் பொருட்களை வாங்கும்போது பல்வேறு இடர்பாடுகள், திருட்டுகள், மோசடிகள் நடக்கின்றன. இந்த மின்னணு திருட்டுகள், மோசடி மூலம் ஏராளமானோர் லட்சக்கணக்கில் பணத்தை இழந்துள்ளனர். இதைத் தடுக்கவும் வாடிக்கையாளர்களின் நலனுக்காகவும் ரிசர்வ் வங்கி கிரெடிட், டெபிட் கார்டுகளில் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அது குறித்த விபரம் வருமாறு.

- அனைத்து டெபிட், கிரெடிட் கார்டுகளுக்கு இந்தியாவில் உள்ள ஏ.டி.எம் மையங்கள், பாயின்ட் ஆஃப் சேல் எந்திரங்களில் மட்டுமே பயன்படுத்த முடியும்.
- இந்தியாவுக்கு வெளியே அதாவது வெளிநாடுகளிலும் தங்களின் கிரெடிட், டெபிட் கார்டுகளை பயன்படுத்த வேண்டும் எனும் வசதியை வாடிக்கையாளர்கள் பெற விரும்பினால், தாங்கள் கணக்கு வைத்துள்ள வங்கியின் கிரெடிட் கார்டுகள் வழங்கியுள்ள வங்கியிடம் வேண்டுகோள் விடுத்து வசதியைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த அறிக்கைக்கு முன் பெரும்பாலான வங்கிகள் வெளிநாடுகளிலும் தங்களின் கிரெடிட், டெபிட் கார்டுகளை பயன்படுத்தும் வகையில் வசதி செய்திருந்தன.
- ஏற்கனவே டெபிட், கிரெடிட் கார்டுகளை இந்த வசதியுடன் வைத்திருப்பவர்கள் குறித்து கார்டு வழங்கும் வங்கிகள் முடிவு எடுக்கும். வெளிநாடுகளில் பயன்படுத்தக்கூடிய வசதி இருந்தால் முடக்கி வைத்து வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்குப்பின் மீண்டும் வழங்கலாம். இது வங்கியின் முடிவாகும்.
- டெபிட், கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்கள் ஆன்லைன் பரிவர்த்தனை அல்லது கான்டாக்ட்லெஸ் பரிவர்த்தனையை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ செய்யாமல் இருந்தால், அந்த கார்டுகளின் ஆன்லைன் பேமெண்ட் வசதியை நிறுத்திவைக்க வங்கிகளுக்கும், கார்டு வழங்கிய நிறுவனங்களுக்கும் ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது. அது நடைமுறைக்கு வந்துள்ளது.
- புதிய விதியின்படி, கிரெடிட், டெபிட் கார்டு வைத்திருப்பவர்கள் ஆப்ட் இன் அல்லது ஆப்ட் அவுட் சேவையைப் பெறலாம். ஆன்லைனிலும், சர்வதேச பரிவர்த்தனைகளிலும், கான்டாக்ட்லெஸ் பரிவர்த்தனையிலும் குறிப்பிட்ட அளவு வரை செலவு செய்ய அனுமதிக்கும் வசதியைப் பெறலாம்.
- மொபைல், இன்டர்நெட் சேவை, ஏடிஎம், வாய்ஸ் சேவை ஆகியவற்றின் மூலம் பரிமாற்றங்கள் குறித்த சேவையை 24 மணி நேரமும் பெறும் வசதியை தேவைப்பட்டால் பெற்றுக்கொள்ளலாம். அல்லது நிறுத்திக்கொள்ளலாம்.
- வாடிக்கையாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கிரெடிட், டெபிட் கார்டுகளில் என்எப்சி வசதி அதாவது கான்டாக்ட்லெஸ் வசதி இருந்தால், அதை பயன்படுத்திக்கொள்ளலாம் அல்லது அந்த சேவையை நிறுத்திக் கொள்ள முடியும்.
- டெபிட், கிரெடிட் கார்டு வைத்திருக்கும் அனைவரும் தங்கள் கார்டுகளின் மூலம் பரிவர்த்தனை செய்யக்கூடிய அளவை நிர்ணயம் செய்யும் வசதியைப் பெற முடியும். அவசரச் செலவுக்கு பணம் தேவை, பில் பேமெண்ட், வீட்டுச் செலவு போன்றவற்றுக்கு பணம் தேவைப்படும்போது கார்டுகளில் செலவு செய்யும் அளவை குறைத்துக்கொள்ள முடியும்.
- இந்த செலவு செய்யும், பரிவர்த்தனை செய்யும் அளவை நிர்ணயிக்கும் வசதி என்பது கிரெடிட், டெபிட் கார்டுகளுக்கு மட்டுமே பொருந்தும். ப்ரீபெய்ட் கிஃப்ட் கார்டுகள், மெட்ரோ கார்டுகளுக்கு பொருந்தாது.
- செலுத்துதல் மற்றும் தீர்வு முறைச்சட்டம் 2007-ன் கீழ் இந்த புதிய விதிமுறைகள் அனைத்தையும் ரிசர்வு வங்கி வெளியிட்டுள்ளது.

நன்றி: தி இந்து (த)

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

Cell: 90805 54802, 99424 90217
Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

அனைவரும் பயன்படுத்தக்கூடிய கதவின் கைப்பிடி, தொலைபேசி போன்ற பொருட்களை கிருமி நாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

# ஜவ்வரிசி தயாரிக்கும் முறை



நன்றி: தமிழ் தொழில் உலகம்

ஜவ்வரிசி உற்பத்தியில் தலை சிறந்து விளங்குவது சேலம் மாவட்டம் என்பதை அறிவோம். தமிழக அளவில் ஜவ்வரிசியானது பெருமளவில் பாயாசம் தயாரிக்க மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் வட மாநிலங்களை எடுத்துக்கொண்டால் அங்கு ஒரு முக்கிய உணவுப் பொருளாக விளங்குவதே ஜவ்வரிசிதான். குறிப்பாக தமிழகத்தில் தயாராகும் ஜவ்வரிசியில் 95 சதவீதம் வட மாநிலங்களில் தான் விற்பனை செய்யப்படுகிறது. 5 சதவீதம் தான் நம் பயன்பாடு.

ஜவ்வரிசி தயாரிப்புக்கு மூலப்பொருள் மரவள்ளிக்கிழங்கு ஆகும். ஜவ்வரிசியை மரவள்ளிக்கிழங்கில் இருந்து எப்படித் தயாரிக்கலாம் என்பதை அறியலாமா?

பத்து மாத பயிரான இது சுமார் 85 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. மரவள்ளிக்கிழங்கு ஒரு மானாவரிப் பயிர் என்பதால் தண்ணீரும் குறைவாகவே தேவைப்படும். இதன் காரணமாக ஏராளமான விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கை விரும்பி பயிரிடுகிறார்கள். பூமிக்கடியில் விளைவது மரவள்ளிக் கிழங்கு. இதை விவசாயிகள் அறுவடை செய்தவுடன் ஜவ்வரிசி ஆலைகளுக்கு வழங்குகிறார்கள். அந்த ஆலைகள் சேகோ என்று அழைக்கப்படுகிறன்றன.

சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர். அரியலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் சேகோ ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகளில் மரவள்ளிக் கிழங்கில் இருந்து ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் (மாவு) ஆகியவை தயாரிக்கப்பட்டுகின்றன. இதை தயாரிக்கத் தேவையான மிகப் பெரிய அளவிலான தொட்டிகள் இந்த ஆலைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

மரவள்ளிக் கிழங்கின் தோலானது முதலில் நீக்கப்பட்டு சுத்தம் செய்யப்படுகிறது. பின்னர் அது ராட்சத எந்திரத்தில் போட்டு அரைக்கப்படுகிறது. கரும்பில் இருந்து சாறு எடுக்கிறார்கள் அல்லவா! அதைப் போலவே, மரவள்ளிக் கிழங்கை அரைத்து சாறு எடுக்கப்படுகிறது. அந்த சாறானது பெரிய அளவிலான தொட்டிகளில் ஊற்றப்பட்டு சேமித்து வைக்கப்படுகிறது. இப்படி சேமித்து வைக்கப்படும் மரவள்ளிக்கிழங்கின் பால் ஓராண்டு காலத்திற்கு கெட்டுப் போகாது என்கிறார்கள்.

முக்கியமாக மரவள்ளிக் கிழங்கிற்கு சீசன், ஆண்டு முழுவதும் இருக்கும் என்று சொல்ல முடியாது. இதனால் சீசன் நேரத்தில், கிடைக்கும் மரவள்ளிக் கிழங்கினை அரைத்து பால் எடுத்து சேமித்து வைக்கப்படுகிறது.

இப்படியாகத் தொட்டிகளில் ஊற்றி வைக்கப்படும் பாலானது சில நாட்கள் கழியும்போது தண்ணீர் மேலே பாலாடை போன்று கட்டியாக காணப்படும் பொருள் கீழேயுமாக இருக்கும். அதன் பின்னர் மேலே இருக்கும் தண்ணீரை வெளியேற்றி விடுவார்கள். அடுத்து அடிப்பகுதியில் பாலாடை போன்று கட்டியாக காணப்படும் பொருளை காய வைக்கிறார்கள். இது பார்ப்பதற்கு மாவு போன்று காணப்படும். இதனை ஸ்டார்ச் என்கிறார்கள்.

இந்த ஸ்டார்ச்சில் இருந்து தான் ஜவ்வரிசியை தயாரிக்கிறார்கள். இது மட்டுமல்லாமல் பேப்பர், நூல், சாக்லெட் என சுமார் 400 வகையான பொருட்கள் தயாரிப்பிற்கு இது பயன்படுகிறது. ஸ்டார்ச்சில் இருந்த ஜவ்வரிசி தயாரிக்கப் பட்டாலும் மற்ற மேற்கண்ட பொருட்களை தயாரிக்க அந்தந்த தொழிற்சாலைகளுக்கு இதை அனுப்பி வைக்கிறார்கள்.

ஜவ்வரிசியானது ஸ்டார்ச்சில் இருந்து இரு வகைகளில் தயாரிக்கப்படுகிறது. அது எப்படி என்றால், மாவு போல் இருக்கும் ஸ்டார்ச்சை வறுத்தும், வேக வைத்தும் தயாரிக்கப்படுகிறது.

வேக வைக்கும் முறை என்பது, வீட்டில் இட்லியை வேக வைக்கும் அதே வழிமுறைதான். எப்படி என்றால் ஒரு எந்திரத்தில் மாவு போன்ற ஸ்டார்ச்சுக்கு வடிவம் கொடுக்கப்படுகிறது. அந்த எந்திரத்தில் சல்லடை போன்று சலித்தபின் அது சிறு, சிறு உருண்டையாக பிடிக்கப்படுகிறது. அதை அடுத்து, ராட்சத பர்னரில் அது வேக வைக்கப்படுகிறது. அப்படி அது சுமார் 45 நிமிடங்கள் வெந்ததும் எடுத்து காய வைக்கிறார்கள். ஒன்றிரண்டு நாளில் இந்த வகை ஜவ்வரிசி இப்படியாக தயாரிக்கப்படுகிறது.

வறுக்கும் முறை என்பது, சிறு, சிறு உருண்டையாக மாற்றப்பட்ட ஸ்டார்ச்சை பெரிய வடச்சட்டி போன்ற எந்திரத்தில் போட்டு வறுக்கிறார்கள். அப்படி வறுக்கப்பட்ட ஜவ்வரிசியை சில நிமிடங்களில் அதன் வெப்பம் தணிய ஆற விடுகிறார்கள். சூடு குறையும்போது ஜவ்வரிசி தயாராகி விடுகிறது. இவ்வாறான இரு முறைகளில் தான் ஜவ்வரிசி தயாரிப்பனது நடந்து வருகிறது.



# காப்புரிமை பெறுவதை எளிமையாக்கும் காப்புரிமை (திருத்தம்) விதிகள் 2020



காப்புரிமை பெறுவதற்கான படிவம் 27 தாக்கல் செய்தல், முதன்மையான ஆவணங்களின் சரிபார்க்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பை தாக்கல் செய்தல் ஆகியவற்றை எளிமையாக்கும் வகையில் காப்புரிமை (திருத்தம்) விதிகள் 2020 கொண்டு வரப்பட்டுள்ளது. ஷம்னாத் பஷீர் மற்றும் இந்திய அரசு மற்றும் பிறருக்கு இடையேயான ரிட் மனு எண் WPC 2015-ன் 5590-ன் மீது தில்லி உயர் நீதிமன்றம் 23.04.2018 அன்று அளித்த உத்தரவின்படி, காப்புரிமையை எளிமையாக்குவது குறித்து பங்குதாரர்களிடம் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆலோசனையில், இந்தியாவில் வணிக மட்டத்திலான (படிவம் 27) காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்பு பணிகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட வேண்டிய அறிக்கையின் தேவைகளை எளிமைப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. காப்புரிமை (திருத்தம்) விதிகள் 2020, என்பது, 2020 அக்டோபர் 19-ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது. முதன்மை ஆவணங்கள் ஆங்கிலத்தில் இல்லாதபட்சத்தில், சரிபார்க்கப்பட்ட ஆங்கில ஆவணங்களை சமர்ப்பித்தல் மற்றும் படிவம் 27 தொடர்பான தேவைகளை மேலும் எளிமைப்படுத்தும் வகையில் இந்த விதிகள் அமலுக்கு வந்துள்ளன. படிவம் 27-ன் படி விதி 131(2)-ல் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- ஒரே ஒரு காப்புரிமை அல்லது பல்வேறு தொடர்புடைய காப்புரிமைகளுக்கு ஒரே ஒரு படிவம் 27 தாக்கல் செய்வதால் காப்புரிமை பெறுவோருக்கு நெகிழ்வுத் தன்மை கிடைக்கும்.
- காப்புரிமை இரண்டு அல்லது மூன்று நபர்களுக்கு வழங்கப்படும் பட்சத்தில் அந்த நபர்கள் ஒன்றிணைந்து படிவம் 27 தாக்கல் செய்யலாம்.
- காப்புரிமை பெறுவோர் வருவாய் / மதிப்பின் தொகுப்பைத் தோராயமாக குறிப்பிட வேண்டும்.
- காப்புரிமை பெறுவோரின் சார்பில் அங்கீகாரம் பெற்ற முகவர்கள் படிவம் 27-ஐ சமர்ப்பிக்கலாம்.
- படிவம் 27 தாக்கல் செய்வதற்கு நிதி ஆண்டு காலாவதி ஆவதில் இருந்து ஆறு மாதங்கள் வரை அவகாசம் கிடைக்கும். தற்போது இது மூன்று மாதங்களாக உள்ளது.
- நிதி ஆண்டின் ஒரு சிறிய அளவு அல்லது ஒரு பகுதிக்காக காப்புரிமை பெறுவோர் படிவம் 27 தாக்கல் செய்ய வேண்டியதில்லை.
- படிவம் 27 தாக்கல் செய்வது தொடர்பான தகவல் தேவைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன அதே வேளையில், காப்புரிமை சட்டம் 1970-ல் உள்ள பிரிவு 146(1)-ன் படி காப்புரிமை பெறுவோரிடம் இருந்து தகவல்களைக் கேட்பதற்கு கட்டுப்பாட்டாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

*- PIB News / Dtd: 28.10.2020*




PG INDIA



**PG India**

Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in



P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

**A TO Z CCTV SYSTEMS**
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633


காய்ச்சல், இருமல், சளி, வறண்ட தொண்டை இருநாட்களுக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக மருத்துவரை அணுகவும்.



https://youtu.be/-JMVniVMLr0

# சானிடைசர் சந்தேகங்கள்...

இது கொரோனா காலம். கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க வரும்முன் காக்கும் வழியில் கைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அடிக்கடி சோப்பு போட்டுக் கைகளைக் கழுவ வேண்டும். வெளியிடங்களில் ஹேண்ட் சானிடைசர் கொண்டு கைகளைச் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். சோப்பும் சானிடைசரும் கொரோனா வைரஸை முற்றிலும் அழிக்குமா, அவற்றை எப்படிப் பயன்படுத்துவது, மற்றும் கெடுதல்கள் என்ன என்பன போன்ற சந்தேகங்கள் பயனாளிகளுக்கு எற்படுவது இயல்பு. சானிடைசர் (கிருமிநாசினி) குறித்த சந்தேகங்களுக்கு சுருக்கமான அறிவியல் விளக்கம்:

**சானிடைசர் என்பது என்ன?** சானிடைசர் என்பது சோப்பும் தண்ணீரும் கிடைக்காதபோது அல்லது அடிக்கடி கை கழுவ நேரமில்லாத போது அவசரத்துக்குக் கைகளைச் சுத்தப்படுத்த உதவும் கிருமிநாசினி. முன்பு மருத்துவர்களும் மருத்துவப் பணியாளர்களும் நோயாளிகளைத் தொட்டுப் பரிசோதித்துவிட்டு கைகளைச் சுத்தப்படுத்த சானிடைசரை பயன்படுத்துவது வழக்கம். இப்போது கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க கைகள் சுத்தமாக இருக்க வேண்டியது அவசியம். சோப்பு இல்லாத இடங்களில் அல்லது சோப்புப் போட்டுக் கை கழுவத் தண்ணீர் உள்ளிட்ட வசதி இல்லாத இடங்களில் பொதுமக்களும் சானிடைசரைப் பயன்படுத்திக் கைகளைச் சுத்தப்படுத்திக் கொள்ளலாம் என உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. கை சுகாதாரம் காக்க சானிடைசர் பயன்படகிறது.

**சானிடைசரில் வகைகள் உண்டா?** ஆல்கஹால் கலந்தது, ஆல்கஹால் கலக்காதது என்று இரு வகை சானிடைசர்கள் உண்டு. ஜெல், நுரை, திரவம் எனப் பல வடிவங்களில் சானிடைசர் கிடைக்கிறது.

**எதைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது?** சானிடைசரில் 40% தண்ணீர், 60% ஆல்கஹால் உள்ளது. வசீகரிக்கும் நறுமணத்துக்காகவும் கண்களைக் கவரும் நிறத்துக்காகவும் சில வேதிப் பொருள்கள் கலக்கப்படுகின்றன. ஆல்கஹால் சானிடைசர் என்பது 65 சதவீதம் எத்தில் ஆல்கஹால் (எத்தனால்), 35 சதவீதம் ஐஸோ புரோபைல் ஆல்கஹால் ஆகியவற்றைத் தயாரிக்கப்படுகிறது. ஆல்கஹால் அல்லாத சானிடைசர் பென்சால் கோனியம் குளோரைடு (Benzal konium Chloride), டிரைக்ளோசன் (Triclosan) போன்றவற்றை முக்கியப் பொருள்களாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

**எந்த சானிடைசர் நல்லது?** குறைந்தது 60 சதவீதம் எத்தில் ஆல்கஹால் கலந்துள்ள சானிடைசர் நல்லது என்கிறது உலக சுகாதார நிறுவனம். பல நிறுவனங்கள் விலையைக் குறைப்பதற்காக ஆல்கஹால் அளவைக் குறைத்துவிடுகின்றன. பயனாளிகள் இதைக் கவனித்து வாங்கிப் பயன்டுத்த வேண்டும்.




**கொரோனாவுக்கு எதிராக சானிடைசர் எப்படிப் பாதுகாப்பு தருகிறது?** கொரோனா வைரஸில் உள்ள கொழுப்புப் படிவங்களை, சானிடைசரில் உள்ள ஆல்கஹால் உடைத்துவிடுகிறது. அதனால் கொரோனா அழிந்துவிடுகிறது. சானிடைசரை முறையாகப் பயன்படுத்தும்போது மட்டுமே இந்தப் பலன் கிடைக்கும். இல்லாவிட்டால் போலியான பாதுகாப்புதான் தரும்.

**எப்போது சானிடைசரைப் பயன்படுத்தக் கூடாது?** பொதுவாக நெருப்பு உள்ள இடங்களுக்கு அருகில் சானிடைசரைப் பயன்படுத்தக் கூடாது. காரை ஸ்டார்ட் செய்யும்போது, சமைக்கும் போதும் போதும், பயன்படுத்தக் கூடாது. கைகளில் கண்ணுக்குத் தெரியும் அழுக்கு இருந்தால், ஏதேனும் ரசாயனங்களைத் தொட்டுவிட்டால், விளையாடிவிட்டு வந்தால் சானிடைசரைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக சோப்பு பயன்படத்துவதுதான் நல்லது. சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் கழிவறைக்குச் சென்றுவந்த பிறகும் வளர்ப்புப் பிராணிகளைத் தொட்ட பிறகும் சானிடைசர் கொண்டு கைகளைச் சுத்தப்படுத்துவது அவ்வளவாகப் பலன் தராது. அப்போது சோப்புதான் நல்லது.

**சோப்புக்கு சானிடைசர் ஈடாகுமா?** சானிடைசர் பயன்பாடு சோப்புக்கு ஈடாகாது. 20 விநாடிகளுக்குக் கைகளைச் சோப்பு போட்டு கழுவும்போது கொரோனா வைரஸ் முழுவதுமாக அழிந்துவிடும். ஆனால், சானிடைசரை முறையாகக் கைகளில் முழுவதுமாகப் பூசிச் சுத்தப்படுத்துகிறவர்கள் சிறிய சதவீதமே. ஆகவே, சோப்புக்கு அடுத்தபடியாக மட்டுமே சானிடைசரைச் சொல்லலாம்.

Sowndarya Traders

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

**வீட்டில் தயாரிக்கப்படும் சானிடைசர்களைப் பயன்படுத்தலாமா?** வீட்டில் தயாரிக்கப்படும் சானிடைசர்களில் எத்தில ஆல்கஹால் சரியான அளவில் இருக்க வேண்டியது முக்கியம். அடுத்து, மருந்து நிறுவனங்கள் தயாரிக்கும் சானிடைசர்களில் எமோலியன்ட் (Emollient) எனும் ஒரு ரசாயனக் கலவை காணப்படும். சானிடைசரில் உள்ள முக்கிய வேதிப்பொருள்கள் சருமத்தைப் பாதிப்பதைத் தடுக்கும் பொருள் இது. பெரும்பாலும் இந்தக் கலவை வீட்டில் தயாரிக்கும் சானிடைர்களில் காணப்படுவதில்லை. முக்கியக் குறைபாடு இது. அடுத்து, வீட்டில் தயாரிக்கப்படும் சானிடைசரின் நம்பகத்தன்மைக்கு உத்தரவாதமும் இல்லை.

**சானிடைசரை எங்கு வைத்துக்கொள்வது நல்லது?** சானிடைசரை சாதாரணமாக வெளியில் எங்கும் வைத்துக்கொள்ளலாம். குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் இதை வைத்துப் பாதுகாப்பது முக்கியம். கோடை காலத்தில் சானிடைசரை காரில் வைத்துக்கொள்வது ஆபத்து. பொதுவாக, 105 டிகிரி வெப்பத்துக்கு மேல் இருக்கும் இடங்களில் இதைப் பத்திரப்படுத்தக் கூடாது.

**குழந்தைகள் சானிடைசரைப் பயன்படுத்தலாமா?** குழந்தைகள் தங்கள் கைகளை சோப்பு போட்டு தண்ணீரில் கழுவுவதே ஆரோக்கியம் காக்கும் வழி. சானிடைசரிலிருந்து வெளிப்படும் வாசனை முகர்வதற்கு இனிமையாக இருக்கும். ஆனால், அது சுவாசமண்டலத்தைப் பாதிக்கும். குழந்தைகளுக்கு ஆஸ்துமா வருவது, இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்த நறுமணத்தின் காரணமாக குழந்தைகள் இவற்றை உட்கொள்வதற்கான சாத்தியம் அதிகம். 10 மில்லி அளவுக்கு மேல் உட்கொண்டு விட்டால் இவை நஞ்சாகக்கூடிய ஆபத்தும் உள்ளது. வாந்தி, வயிற்றுப்போக்கு, வலிப்பு, சுய நினைவை இழத்தல் போன்ற பாதிப்புகள் ஏற்படக்கூடும்.

**சானிடைசர் பயன்பாட்டில் கெடுதல்கள் உண்டா?** உண்டு. சானிடைசரில் உள்ள ரசாயனங்கள் சிலருக்கு ஒவ்வாமையை எற்படுத்தலாம். அடிக்கடி சானிடைசரைப் பயன்படுத்தும்போது, சருமத்தைப் பாதித்து, அரிப்பு, சிவப்பு நிறத் தடிப்புகள், உலர் தோல் தோன்றுவதற்கு வழிசெய்யும். கண்ணில் பட்டுவிட்டால் கண் எரிச்சல் ஏற்படும். கண்கள் சிவப்பாகும். இன்னொரு முக்கிய பாதிப்பு என்னவென்றால், சானிடைசரைத் தொடர்ந்து பயன்படுத்தும்போது, ஒரு கட்டத்தில் கிருமிகள் தங்கள் எதிர்ப்பு ஆற்றலை (Anti-Microbial resistance) பெருக்கிக்கொள்கின்றன. அடிக்கடி சானிடைசரைப் பயன்படுத்தும்போது கைகளில் உள்ள நன்மை தரும் பாக்டீரியா வகைகள் அழிந்துவிடவும் சாத்தியம் உண்டு. சோப்புப் பயன்பாட்டில் இந்தக் குறைபாடுகள் இல்லை.

ஆல்கஹால் கலக்காத சானிடைசர்களை கொரோனாவுக்கு எதிராகப் பயன்படுத்த உலக சுகாதார நிறுவனம் பரிந்துரை செய்யவில்லை. காரணம், இவற்றில் டிரைகுளோசான், டிரைகுளோகார்பன் எனும் வேதிப்பொருட்கள் இருக்கின்றன. இவை பூச்சிக்கொல்லி மருந்தின் முக்கியமான சேர்க்கைப் பொருட்கள். இவை புற்றுநோயை ஊக்குவிக்கிற மோசமான காரணிகள். இவை ரத்தக் குழாய்கள் பயணிக்கும் போது சில ஒவ்வாமை விளைவுகளையும் ஏற்படுத்தும். இதன் விளைவால் நரம்புப் பிரச்சினைகள், மலட்டுத்தன்மை, தசை வலுவிழத்தல் போன்ற பாதிப்புகள் நாளடைவில் ஏற்படக்கூடும்.

சில சானிடைசர்களில் நறுமணத்துக்காக தாலேட் எனும் வேதிப்பொருளைச் சேர்க்கிறார்கள். இதைப் பயன்படுத்தும் கர்ப்பிணிகளுக்குப் பிறவிக் குறைபாடுள்ள குழந்தை பிறக்க வழி செய்வதாக சமீபத்திய ஆராய்ச்சி உறுதிசெய்தள்ளது. அடுத்து, பாரபென்ஸ் எனும் வேதிப்பொருள் ஒன்றும் சானிடைசரில் கலக்கப்படுகிறது. இது சருமத் துவாரங்களை அடைத்து, சருமத்தைத் தடிமனாக்கிவிடுகிறது. போகப்போக சருமப் புற்றுநோய் ஏற்படுத்துவதற்கும் சாத்தியமுள்ளது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இறுதியாக வைரஸ், பாக்டீரியா போன்ற கிருமிகளை இது முற்றிலும் அழிப்பதில்லை. கைகளில் இருக்கும் கண்ணுக்குத் தெரியும் அழுக்குகளையும் இதனால் சுத்தப்படுத்த முடிவதில்லை.

முக்கியமான ஒன்று, சானிடைசர்கள் எல்லாமே பிளாஸ்டிக் குப்பிகளில் கொண்டுவரப்படுவதால், இனி வரும் காலத்தில் சுற்றுச்சூழலைக் கெடுக்கும் குப்பைப் பொருட்களில் சானிடைசர் குப்பிகளும் அதிகமாகச் சேரும்.

எனவே, கைகளைக் கழுவ அவசரத்துக்கு மட்டுமே ஆல்கஹால் கலந்த கிருமிநாசினிகளைப் பயன்படுத்தலாம். தேவையான நேரமும், தண்ணீர் வசதியும் உள்ளவர்கள் சோப்பு, தண்ணீரைக் கொண்டு கைகளைக் கழுவுவதுதான் மிக நல்லது. கொரோனாவைத் தடுக்க உதவும் முக்கியப் போராளிகளில் சோப்புதான் முன்னிலையில் உள்ளது. -நன்றி: தி இந்து (த)




சத்குரு ஸரணம் சரணம்
K.D. பத்மினி
(A to Z Arrangements) அவ்த்த லவி பூல் தேரியோ ⁕ வரவேற்பு அமைப்பாளர்
98946 71401 99426 71819
63819 26819 90255 17366
பத்மினி ஈவன்ட்ஸ்
★ திருமணம் ★ நலுங்கு ★ நிச்சயதார்த்தம் ★ வளைகாப்பு ★ பிறந்த நாள் ★ பலூன் ★ ஷஷ்டியப்த பூர்த்தி ★ புதுமனை புகுவிழா மற்றும் சுப வைபவங்களுக்கு
★ புஷ்பம் ★ மேடை அலங்காரம் ★ கிப்ட் பேக்கிங் ★ கேட்டரிங் மற்றும் ★ பத்திரிக்கை அச்சடித்தல் ★ ஹனிமூன் & டூர் பேக்கேஜ் (உள்நாடு, வெளிநாடு)
மேற்கண்ட வேலைகள் அனைத்தும் சிறப்பாக அமைத்து தரப்படும்.
5-A, பழைய இங்கிலீஷ் கிளப் சந்து, காமராஜர் சாலை, மதுரை-9.

# முதல் உதவி அறிவோம்

முதல் உதவி என்பது ஒரு நோய்க்கோ அல்லது காயத்துக்கோ அளிக்கும் முதல் கட்ட பாதுகாப்பு பணியாகும். உரிய மருத்துவ சிகிச்சை கிடைக்கும் நேரம் வரை இந்த முதல் உதவி, காயமடைந்தவர்களுக்கோ அல்லது நோய் வாய்ப்பட்டவர்களுக்கோ பாதுகாப்பு அளிக்கிறது. முதல் உதவி என்பது, பல சமயங்களில் இழக்கவிருந்த உயிரைக் காக்கும் திறனுடையது. மருத்துவத் துறையில் சிறப்புடைய நிபுணராக அல்லாத, அதே சமயம் பயிற்சி பெற்ற ஒரு நபரால் முதல் உதவி அளிக்கப்படுகிறது. ஒருவர் குறைந்த உபகரணங்களைக் கொண்டு செயல்படுத்தும் வகையில், முதல் உதவியானது அமைய வேண்டும்.

விபத்து போன்ற எதிர்பாராத சம்பவங்களில் சிக்கி காயம் அடைந்தவர்களையோ, வேறு காரணங்களால் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்களையோ மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்குள் காலம் கடந்து விடுகிறது. உலக அளவில் மனித உயிரிழப்புக்கு முக்கியக் காரணியாக இருப்பது விபத்துகள்தான். இந்தியாவில் விபத்துகளில் இறப்பவர்களில் 80 சதவீதம் பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் உயிரிழப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அதற்கு காரணம் விபத்தில் பாதிக்கப்பட்டவுடன் முறையான முதல் உதவி கிடைக்கவில்லை என்பதைத்தான் இது வெளிப்படுத்துகிறது.

இந்தியாவில் போதிய முதல் உதவி கிடைக்காததால் நூற்றில் நான்கு பேர் இறப்பதாக அறிக்கையொன்று கூறுகிறது. விபத்து ஏற்படும் நேரத்தில் செய்யப்படும் சிறு முதல் உதவி கூட மற்றவர்களின் வாழ்க்கையில் ஒளியை ஏற்றும். விபத்தில் சிக்கியவர்களுக்கு உரிய முறையில் அளிக்கப்படும் முதல் உதவியால் 50 சதவீதம் பேரைக் காப்பாற்றலாம் என இப்பணியில் ஈடுபடுவோர் கூறுகின்றனர்.

முதல் உதவி அளிப்பது எப்படி என்று நம்மில் பலருக்குத் தெரியாததாலேயே விபத்தில் சிக்கும் பலரையும் நம்மால் காப்பாற்ற முடியாமல் போகிறது. எனவே தான் முதல் உதவி அளிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் இரண்டாவது சனிக்கிழமை உலக முதல் உதவி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாலை விபத்து, தீ விபத்து, மின் கசிவால் விபத்து, வீடுகள், தொழிற்சாலைகளில் விபத்து, மூச்சுத்திணறல், மாரடைப்பு போன்ற திடீர் உடல்நலக் குறைவு உள்ளிட்ட எத்தனையோ எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்கின்றன.

இப்போதெல்லாம் விபத்தாலோ வேறு காரணங்களாலோ பாதிக்கப்பட்டு துன்பப்படுபவரை முதல் உதவி அளித்து காப்பாற்றுவோரை விட, அவரைச் சுற்றி நின்று செய்வதறியாது வேடிக்கை பார்ப்பவர்களே அதிகமானோர் உள்ளனர். சிலர் விபத்து எப்படி நிகழ்ந்தது என்பதை அருகில் இருப்பவர்களிடம் ஆர்வத்துடன் கேட்டுத் தெரிந்து கொண்டு, அங்கிருந்து நகர்ந்து விடுகின்றனர். வேறு சிலரோ தங்களின் செல்லிடப்பேசி மூலம் விபத்து குறித்த படங்களைப் பிடித்து சமூக வலைதளங்களில் பதிவிடுகின்றனர். ஒருசிலர் விபத்தைப் பார்த்தால்கூட கண்டுகொள்ளாமல் சென்று விடுகின்றனர். மனிதாபிமானமற்ற பெரும்பாலோர் இதையே செய்து வருகின்றனர். மனிதாபிமானம் உள்ள சிலர் மட்டுமே, காயம் அடைந்தவர்களுக்கு தண்ணீர் கொடுப்பது, அவசர சிகிச்சை ஊர்திக்கு தகவல் தெரிவித்து விட்டு, காத்திருந்து மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவினால் ஏதேனும் சிக்கல் வந்து விடுமோ என்ற அச்சத்திலேயே பலர் இவ்வாறு செல்கின்றனர். அதுபோல உதவி செய்யும் ஆர்வம் பலருக்கு இருந்தாலும் எந்த முதல் உதவியை எப்படி செய்ய வேண்டும் எனத் தெரியாததால் இப்பணியில் அவர்கள் ஈடுபடுவதில்லை. இச்செயலால் ஒருவரின் உயிரிழப்புக்கோ அல்லது ஒருவரின் உறுப்பு இழப்புக்கோ நம்மை அறியாமலேயே நாமும் காரணமாகி விடுகிறோம்.

விபத்தில் காயம் அடைந்த ஒருவரின் முதல் ஒரு மணி நேரம் மிகவும் முக்கியம். அப்போது, தரப்படும் முதல் உதவியானது, பாதிக்கப்பட்டோரின் உயிரைக் காக்கும் கேடயமாக அமையும். உயிருக்கு ஆபத்தான காலங்களில் நாம் செய்யும் சிறு சிறு முதல் உதவி கூட உயிரைக் காப்பாற்ற உதவும் என்பதை அனைவரும் உணர வேண்டியது அவசியம்.

தக்க நேரங்களில் செய்யப்படும் முதல் உதவிக்கு சட்டமும் காவல்துறையும் எப்போதும் துணை நிற்கும் என முதல் உதவி பயிற்சியாளர்கள் கூறுகின்றனர். விபத்து நிகழும் நேரத்தில் முதல் உதவி சிகிச்சை தெரிந்த ஒருவர் அருகில் இருந்தால் பாதிக்கப்பட்டவருக்கு உரிய முறையில் உதவ முடியும். எனவே, **ஒரு குடும்பத்தில் ஒருவர் முதல் உதவிப் பயிற்சி எடுத்துக் கொண்டால், எதிர்பாராத நேரத்தில் நம் குடும்பத்திலோ அல்லது அக்கம்பக்கத்திலோ இருப்போரின் உயிரைக் காப்பாற்ற முடியும்.**

அதுபோல, அடுக்குமாடிக் குடியிருப்புகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வாகனங்கள், பொது இடங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் முதல் உதவிப் பெட்டி அவசியம் இருக்க வேண்டும். இதற்காக செலவிடப்படும் சிறிய தொகை விலை மதிக்க முடியாத மனித உயிரைக் காக்க உதவும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பள்ளி, கல்லூரி, தொழிற்பயிற்சி மாணவர்களுக்கு முதல் உதவி குறித்து தெரிந்து கொள்ளும் வகையில், ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் முதல் உதவிப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்வேறு அமைப்பினர் மருத்துவ முகாம், ரத்த தான முகாம்கள் உள்ளிட்டவற்றை நடத்துவது போன்று ஆங்காங்கே முதல் உதவிப் பயிற்சி முகாம்களை நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். அதுபோல நலத்திட்ட உதவிகளாக பல்வேறு பொருள்களை அளிப்பதுபோல் முதல் உதவிப் பெட்டிகளையும் வழங்கலாம்.

ஆபத்தில் இருக்கும் உயிரைக் காப்பாற்றும் வாய்ப்பு எல்லாருக்கும் கிட்டுவதில்லை. முதல் உதவி குறித்து தெரிந்து வைத்திருந்தால் அப்படிப்பட்ட வாய்ப்பு வந்தால் நம்மால் பல உயிர்களைக் காப்பாற்ற இயலும். – நன்றி: தினமணி

கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.

# VENTURE CAPITAL FUND FOR BACKWARD CLASSES

*Source: www.vcfsc.in*
*Ministry of Social Justice and Empowerment, Govt. of India.*

A first of its kind Venture Capital Fund launched by Ministry of Social Justice and Empowerment, Government of India to promote entrepreneurship in India among the Backward Classes by providing concessional finance to them.

## Eligibility Criteria

The following are the eligibility criteria for prospective Companies promoted by Backward Classes entrepreneurs in the country for seeking assistance under the fund:

- The projects being set up in manufacturing, services sector and allied sectors ensuring asset creation out of the funds deployed.
- Start ups would also be eligible for finance as per the scheme guidelines;
- Women and disabled Backward Classes entrepreneurs will be preferred;
- Minimum existence and shareholding criteria:
    - » **If assistance is below Rs. 50 lakh -** Companies having at least 51% stake holdings by Backward Classes entrepreneurs for the past 6 months with management control OR a new Company provided that the new Company is a successor entity of a Proprietary Firm or Partnership Firm or One Person Company (OPC) or Limited Liability Partnership (LLP) or any other establishment incorporated under any law in force, with sound business model which has been in operation for over 6 months, and the predecessor entity had at least 51% shareholding of the Backward Classes promoters with management control.
    - » **If assistance is above Rs.50 lakh -** Companies having at least 51% stake holdings by Backward Classes entrepreneurs for the past 12 months with management control OR a new Company provided that the new Company is a successor entity of a Proprietary Firm or Partnership Firm or One Person Company (OPC) or Limited Liability Partnership (LLP) or any other establishment incorporated under any law in force, with sound business model which has been in operation for over 12 months, and the predecessor entity had at least 51% shareholding of the Backward Classes promoters with management control.
- Documentary proofs of being Backward Classes will have to be submitted.

## Funding Framework

| Sl. No. | Particulars | Details |
|---|---|---|
| 1. | Size of financial assistance | Rs. 20 lakhs to Rs. 5 Crore [Maximum aggregate assistance not more than two times the current net worth of the Company]. |
| 2. | Tenure of financial assistance | Up to 8 years including moratorium period. |
| 3. | Instruments for investment | • Equity/ Optionally Convertible Preference Shares / Compulsorily Convertible Preference Shares;<br>• Compulsorily Convertible Debentures, Optionally Convertible Debentures, Non-Convertible Debentures, etc; |

| Sl. No. | Particulars | Details |
|---|---|---|
| 4. | Funding Pattern | Investment under the fund will be categorized as follows:<br>1. **Financial assistance upto Rs 1 Crore -**<br>Investment under this category shall be funded maximum upto 75% of the project cost and the balance 25% of the project cost will be funded by the promoters;<br>2. **Financial assistance above Rs. 1 Crore –**<br>a. Investment under this category shall be funded maximum upto 50% of the project cost. At least 25% of the project cost shall be funded by promoters and balance 25% of the project cost can be funded either by promoters or by the bank or any other Financial Institutions as the case may be. |
| 5. | Moratorium period for redemption of principal | On case to case basis but not more than 36 months from the date of investment in the Company. However, interest/ coupon payment shall commence from date of investment in the Company at a regular interval as determined by the Investment Committee of the fund. |
| 6. | Returns/ Coupons/ Interest for financial assistance] | • Equity instruments -10% p.a.<br>• Debt/Convertible Instruments - 8% p.a. (For women*/disabled** entrepreneurs -7.75% p.a.) [*For considering a company owned by a Backward Classes women entrepreneur, the Backward Classes women entrepreneur should hold atleast 51% of the shareholding in the company and should be the Managing Director of the Company;<br>** In the case of disabled entrepreneurs, guidelines issued by the Department of Empowerment of persons with Disabilities for qualifying as disabled would be followed.] |
| 7. | Security | • The assets of the project being funded/ assisted under the scheme shall be charged for security. The project assets will include land, building, plant & machinery and rights on licenses/ patents.<br>• Pari-pasu charge on assets with the Banks/FIs in case of the companies applying for assistance of more than Rs. 1 Crore.<br>• 2nd charge of the assets created out of the investment where the 1st charge in held by the Bank/FIs.<br>• In addition to the charge on assets, post-dated cheques and promissory notes shall be taken.<br>• Personal guarantees of the promoters along with buyback agreement shall be entered.<br>• Pledge of Shares held by promoters and forming atleast 26% stake of the Issued and Paid up capital shall be taken. However, the percentage of pledged shares would be decided on case to case basis.<br>• In case adequate mortgage is not available, the borrower may arrange collateral and corporate guarantees from family / friends / associates / group companies. |
| 8. | Alterations | • On case to case basis, the above conditions/terms/ structure may vary and get modified/amended from time to time<br>• The scheme is catering to various territories; the scheme can be modified, reviewed after 6 months to 1 year. |

# ஊட்டச்சத்துமிக்க உணவு முறை

- Dr. A.R. கணேசன்

வலிமையான உடல், நோய் இல்லாத சமுதாயத்தை உருவாக்க ஊட்டச்சத்து மிக்க உணவு அவசியம். மாவு சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து இவை மூன்றும் சேர்ந்த சரிவிகித உணவு தான் நம் உடல் ஆரோக்கியத்துக்கு அடிப்படை. வள்ளுவர் கூறியது போல **மிகினும் குறையினும் நோய் செய்யும்.** இவற்றில் ஏதேனும் ஒன்றை மட்டுமே அதிகம் சேர்த்துக்கொள்வது நோய்க்கு இடம் தரும். ஊட்டச்சத்து என்பது இந்த சரிவிகித உணவை கொண்டது. இத்துடன் இரும்பு சத்து, கால்சியம், அயோடின் போன்ற கனிம சத்துக்களையும், ஏ, பி, சி போன்ற வைட்டமின்களையும் உள்ளடக்கியது.

சீனாவிற்கு அடுத்தாற்போல அதிகம் மக்கள் தொகை கொண்ட நாடு என்பதால் இந்தியாவில் சத்தான உணவுக்கு குறைபாடு உண்டாகிறது. குறைந்த சமூக பொருளாதார நிலையும், முழுமையான கல்வியறிவின்மையும் இதற்கு காரணங்கள். இதனால், பி.ஈ.எம் எனும் புரதசத்து குறைபாடு, இரும்பு சத்து குறைவால் ரத்தசோகை, வைட்டமின் ஏ குறைவால் ரத்தசோகை, வைட்டமின் ஏ குறைவால் கண்பார்வை குறைபாடு போன்ற கோளாறுகள் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றன.

ஊட்டசத்து குறைபாட்டினால் உடல் எடை குறைவு, தசை சூம்பல், நுண்ணூட்டசத்து குறைபாடு, ரத்தசோகை, அயோடின் குறைபாட்டால் தைராய்டு சுரப்பு கோளாறு இவை ஏற்படுவது ஒரு புறம் இருக்க, மறுபுறம், அதிக ஊட்டச்சத்தினால் உடல் எடை கூடுகிறது. இந்தியாவில் 7.5% குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் அவதியுறுவதாக ஆய்வறிக்கை கூறுகிறது.

இது குழந்தைகளின் ஆரோக்கியத்தை மட்டுமல்ல, கல்வி வளர்ச்சியையும் பாதிக்கும், இதனால் பல்வேறு நோய்த்தொற்றுகள் ஏற்படும் அபாயம் உள்ளது. உலக சுகாதார நிறுவனம் உலகம் முழுவதும் பெரும்பாலும் 10 முதல் 19 வயதுள்ளவர்கள் ஊட்டச்சத்து பற்றாக்குறையினால் அவதியுறுவதாகக் குறிப்பிடுகிறது.

உணவே மருந்து என்ற சித்த மருத்துவ தத்துவப்படி, சத்தாண உணவு முறைகளே நோயை தீர்க்கும், நோயைத் தடுக்கும். தமிழர்களின் பாரம்பரிய உணவு முறைகளே ஊட்டசத்து குறைபாடுகளை நீக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன. அரிசியும், உளுந்தப்பருப்பும் சேர்ந்த இட்லியில் மாவுசத்தும், புரத சத்தும் உள்ளன. அரிசியும் பருப்பும் நெய்யும் சேர்ந்த பொங்கல் சரிவிகித ஊட்டச்சத்து உணவுக்கு சிறந்த உதாரணம்.

புரதசத்து மிகுந்த தானியங்களும் பருப்பு வகைகளும் சிறு தானிய வகைகளும் உடலில் உள்ள செல்களுக்குக் கட்டமைப்பை பருவத்தில் உள்ள குழந்தைகளுக்கு தானிய வகைகளை லேசாக வறுத்து பொடி செய்து பாலில் கலந்து கொடுக்கலாம். பச்சரிசி, உளுந்து, சிறு பயிறு, துவரம் பருப்பு, கடலைப்பருப்பு இவை ஐந்தும் சேர்ந்த பஞ்சமுட்டி கஞ்சியைத் தொடர்ந்து கொடுத்து புரதம் மற்றும் ஊட்டச்சத்து குறைவுள்ள நோயாளிகளை குணமாக்க முடியும்.

**எளச்சவனுக்கு எள்ளு** என்ற பழமொழி போல எள்ளு உருண்டையினை தினசரி எடுக்க நல்ல ஊட்டம் தரும். எள்ளு, கார்போ ஹைடிரேட், புரதசத்து, கொழுப்பு சத்து இவை மூன்றும் நிறைந்தது. மேலும் எழும்புக்கு வலிமை தரும் கால்சியம் சத்தும் அதிகம் உள்ளது. இளம் பெண்கள் எடுத்துக் கொண்டால் மாதவிடாய் கோளாறுகள் வரவிடாமல் தடுக்கும்.

இந்தியன் பாதாம் என்று கூறப்படும் வேர்க் கடலையை தினமும் எடுத்துக் கொள்ள நல்ல போஷாக்கு கிடைக்கும். இது புரதசத்தும், கொழுப்பு சத்தும் நிறைந்தது. நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும். மேலும் துத்தநாக சத்தும் இதில் உள்ளது.

கருப்பு உளுந்தின் மகத்துவம் பலரும் அறியாதது. அதிக புரத சத்தும், இரும்பு, கால்ஷியம் போன்ற தாது சத்துகளும் அதிகம் நிறைந்தது. இதனை களியாகவோ, பனை வெல்லம் சேர்ந்த கஞ்சியாகவோ நெய் சேர்த்து உருண்டையாகவோ எடுத்துக் கொள்ள நல்ல பலன் கிடைக்கும். இளம் பருவத்தில் உள்ள பெண்களுக்கும் மிகச்சிறந்தது. இரும்பு சத்து அதிகம் உள்ளதால் ரத்த சோகையை நீக்கும். நரம்பு மண்டலத்தை வலுப்படுத்தும். சித்த மருத்துவத்தில் நரம்பினை வலுப்படுத்தும் மருந்துகளில் உளுந்து சேருவது குறிப்பிடத்தக்கது. பாசிப்பயறு உருண்டையும் சிறந்த ஊட்டசத்தை அளிக்கும்.

கம்பு, சோளம், மக்காச்சோளம் போன்ற புரதசத்து நிறைந்த எளிய சிறுதானிய வகைகளை உணவில் பயன்படுத்துவது உடல் வலிமையைக் கூட்டும். கேழ்வரகு பிட்டு சாப்பிடுவதில் அதில் உள்ள கால்ஷியம் இடுப்பு எலும்புகளுக்கு வலிமையை தரும்.

ஊட்டச்சத்து குறைபாடுகளில் வைட்டமின் ஏ குறைபாடு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. வைட்டமின் ஏ குழந்தைகளின் கண் பார்வைக்கு மட்டமின்றி, வலுவான நோய் எதிர்பாற்றலை உருவாக்கவும் உதவும். எங்கும் எளிதாகக் கிடைக்கும் கேரட், பப்பாளி, மாம்பழம் இவற்றில் வைட்டமின் ஏ அதிகம் உள்ளது. மேலும் மிக எளிதாக நாம் பயன்படுத்தும் முருங்கைக் கீரையை அடையாகச் செய்து குழந்தைகளுக்கு தரலாம். இதில் வைட்டமின் ஏ அதிகம் உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் அதில் உள்ள இரும்புச்சத்து, கால்சியம், மெக்னிசியம் போன்றவை எலும்பினை வலிமைப்படுத்த உதவும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கீரையை வாங்கி அடையாகவோ, ரசமாகவோ சாப்பிட அதிலுள்ள உப்பு சத்துகளும், வைட்டமின்களும் உடலை வலுவாக்கும். முக்கியமாக ரத்த சோகை நீங்கும். கீரையில் இரும்பு சத்து அதிகம்.

சித்த மருத்துவத்தில் சொல்லப்பட்டுள்ள உணவு முறைக்கும், நம் பாரம்பரிய உணவு முறைக்கும் ஏறக்குறைய ஒரே மாதிரியானவையே. இரண்டுமே ஊட்டச்சத்து மிக்க சரிவிகித உணவை அடிப்படையாகக் கொண்டவை. ஆகவே ஊட்டச்சத்துமிக்க பாரம்பரிய உணவு முறையைக் கடைப்பிடித்து வலிமையான சமூகத்தை உருவாக்குவோம்.

# ஸ்ரீ பூக்குழி சக்தி முத்துலட்சுமி

(அம்மா மிட்டோ)

– ஸௌராஷ்டிர மஹான்கள் மற்றும் ஆன்மீக ஆன்றோர்களின் தரிஸனம் புத்தகத்திலிருந்து

(நூல் உதவி: ஈரோடு திரு. K.R. கிருஷ்ணமாச்சாரி)

ஸௌராஷ்ட்ர மகான்களில் மூன்று பெண் அடியார்களில் இவர் இரண்டாவது இடத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

அக்னி சம்பந்தப்பட்ட தெய்வீக நிகழ்ச்சி ஒன்று நாம் வாழும் கலியுகத்திலும் மதுரையில் ஸௌராஷ்ட்ர பிராமண குலத்தில் உதித்த சுமங்கலி பெண் ஒருவர் வாழ்வில் நடந்துள்ளதை பலர் அறிந்திலர். மதுரையில் 17ம் நூற்றாண்டில் மன்னர் திருமலை நாயக்கரை தொடர்ந்து ஆட்சி செய்த ராணி மங்கம்மாள் காலத்தில் (1623-1706) அதாவது 1657-ம் வருடத்தில் ஓர் நாள் அந்தப் புனித நிகழ்ச்சி நடந்துள்ளது.

அவர் பெயர், **முத்துலட்சமி அம்மை**. பா⁴ரத்வாஜ கோத்திரம், த2க்குன் குடும்பத்தில் பிறந்தவர். ஹரித கோத்திரம் வைத்தியம் குடும்பத்தில் திருமணம் நடந்தேறியது. தெய்வ வழிபாட்டில் மிகுந்த சிரத்தையுடவர்.

அன்று ராமாயண காலத்தில் ஸ்ரீராமனின் கட்டளைப்படி அன்னை சீதாதேவி அக்னி பிரவேசத்திற்குக் கொழுந்தன் இலட்சுமணன் அக்னி வார்த்து கொடுத்தார். அது போன்று முத்துலஷ்மி அம்மைக்கு கொழுந்தன் பேச்சு காரணமாகத் தனது தெய்வீக அம்சத்தினை அக்னியாம் பூக்குழியில் இறங்கி வெளிப்படுத்த கணவரின் அனுமதியுடன் சங்கல்பம் செய்து கொண்டார்.

அன்று மதுரையை ஆண்ட ராணி மங்கம்மாள் முன்னிலையில் ஸமூக மக்கள் திரண்டிருந்தனர். 1657-ம் வருடம் தைப்பூச நட்சத்திரத்தன்று பத்தினி பெண் முத்துலட்சுமி அம்மை சுமங்கலி கோலத்துடன் தீப்பொறிச் சுடராம் பூக்குழியில் அன்னை மீனாட்சி அம்மனை இருகரம் கூப்பி வணங்கியவாறு இறங்கித் தனது தெய்வத்தன்மையை வெளிப்படுத்தினார்கள்.

அன்று முதல் அந்நிகழ்வு நடந்த இடத்திற்கு **அம்மா மிட்டோ** என ஸௌராஷ்ட்ர மொழியில் அழைக்கப்பட்டு வருகிறது. இன்று அம்மையின் வம்சாவளி ஸௌராஷ்ட்ர சமூகப் பெருமக்கள் இக்கோவிலைப் பரிபாலனம் செய்து மிகவும் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். **ஸ்ரீ பூக்குழி சக்தி முத்துலட்சுமி** அம்மன் என்ற பெயருடன் ஸௌராஷ்ட்ர சமூக மக்கள் வணங்கி வருகின்றனர்.

## தமிழ்நாடு அரசு

### அரசாணை (நிலை) எண். 554, நாள் 27.10.2020

### அரசு பொது விடுமுறை நாட்கள் அறிவிப்பு

| | | |
|---|---|---|
| 1. ஆங்கிலப் புத்தாண்டு | 01.01.2021 | வெள்ளி |
| 2. பொங்கல் திருநாள் | 14.01.2021 | வியாழன் |
| 3. திருவள்ளுவர் தினம் | 15.01.2021 | வெள்ளி |
| 4. உழவர் திருநாள் | 16.01.2021 | சனி |
| 5. குடியரசு தினம் | 26.01.2021 | செவ்வாய் |
| 6. வங்கிகள் க/கு முடிவு | 01.04.2021 | வியாழன் |
| 7. புனித வெள்ளி | 02.04.2021 | வெள்ளி |
| 8. தெலுங்கு வருடப்பிறப்பு | 13.04.2021 | செவ்வாய் |
| 9. தமிழ்ப்புத்தாண்டு | 14.04.2021 | புதன் |
| 10. மகாவீர் ஜெயந்தி | 25.04.2021 | ஞாயிறு |
| 11. மே தினம் | 01.05.2021 | சனி |
| 12. ரம்ஜான் | 14.05.2021 | வெள்ளி |
| 13. பக்ரீத் | 21.07.2021 | புதன் |
| 14. சுதந்திர தினம் | 15.08.2021 | ஞாயிறு |
| 15. மொகரம் | 20.08.2021 | வெள்ளி |
| 16. கிருஷ்ண ஜெயந்தி | 30.08.2021 | திங்கள் |
| 17. விநாயகர் சதுர்த்தி | 10.09.2021 | வெள்ளி |
| 18. காந்தி ஜெயந்தி | 02.10.2021 | சனி |
| 19. ஆயுத பூஜை | 14.10.2021 | வியாழன் |
| 20. விஜயதசமி | 15.10.2021 | வெள்ளி |
| 21. மிலாதுன் நபி | 19.10.2021 | செவ்வாய் |
| 22. தீபாவளி | 04.11.2021 | வியாழன் |
| 23. கிறிஸ்துமஸ் | 25.12.2021 | சனி |


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

“ஷர்வ ரக்சன்” MRS
BEST NUMEROLOGIST

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வசியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்

FOR APPOINTMENT
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.

Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.

Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj
RIGID PVC PIPES,FITTINGS & TANKS
AN ISO 9001 : 2008 COMPANY





## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

DASU SINCE 1993

## நியூ தாசு மெட்டல்ஸ்
## NEW DASU METALS

25

BRASS AND COPPER POOJA ARTICLES, UTENSILS, STATUES, WHITE METAL HANDICRAFTS, SS VESSELS, TROPHIES, SHIELDS AND GIFT ARTICLES.

254, KAMARAJAR SALAI (NEAR ARASAMARAM), MADURAI - 09)

☎ 0452 4368753 | New Dasu Metals | newdasumetals

www.newdasumetals.com



## Plan & Built
Civil Construction & Interior

DTCP APPROVED LAYOUT

## GOLDEN CITY

இராமு சீதா பாலிடெக்னிக் எதிரில், காரியாபட்டி.

12.5 லட்சம் முதல் தனித் தனி வீடுகள்

2.15 லட்சம் முதல் வில்லா பிளாட்டுகள்

Contact : 8754660660, 9745520920, 9962295452

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Office : 163-A2, First Floor, Thamgam Nagar, Ganesh Theater Signal, Kamarajar Salai, Madurai - 625 009.

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.11.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

info@onvgprint.com
+91 95 97 775 775

FOLLOW US ON

visit :
www.onvgprint.com

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

onVGPrint

— A unit of VIGNESH GRAPHICS —

79-A, South Marret Street,
Madurai - 625 001.

33, Manjanakara Street,
Madurai - 625 001.

48/5, TNHB Colony,
Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

VALE SPECIALTY ORTHO CLINIC
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



Dr. K.N. SUBRAMANIAN MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard



Technical Details :

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



Applications :
- Sarees - Bed Sheets - Furnishing - Dress Material
- Blankets - Made Ups - Shirting



N.S. Rajan

SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org